பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 10 சனிக்கிழமை 26.11.2022 கதிர் 21

இது ரகசியம் அல்ல!

மாகாண சபையின் நியதிச் சட்டங்களை யாக்கும் அதிகாரத்தை வடக்கு ஆளுநர் தாம் பிடுங்கிக் கொண்டவர் போல நடந்து கொண்டிருக்கின்றமை சின்ன விடயம் அல்ல; பெரும் அரசியல் பிரளயத்துக்குக் கால் கோளிடும் தேவையற்ற 2

* நில ஆக்கிரமிப்பை உடன் நிறுத்தி, அபகரித்தவற்றை விடுவிக்குக!
* மாகாண அதிகாரங்களை வழங்கி அத்தேர்தலை உடனே நடத்துக!
* தமிழர் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி!

## தமிழ்க் கட்சிகள் நேற்றுக் கூடி முதற்கட்ட முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 26

தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு,கிழக்கு பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்களை ஒன்றாக வலியுறுத்துவது என் நேற்றைய தினம் ஒன்று கூடிய தமிழக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுடன் தமிழ் மக்களிற்கான தீர்வு குறித்துப் பேசுவது தொடர்பில் ஒருமித்த கருத்தை எட்டும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் பூர்வாங்கமாக எட்டப்பட்டது.

கொழும்பில் இரா.சம்பந்தனின் இல்லத்தில் 2

# மாகாணசபை நியதிச் சட்டத்தை வடக்கு ஆளுநரே ஆக்குகின்றார்



## பெரும் அரசமைப்பு அத்துமீறல் ஈ.பி.டி.பியின் தவராஜா காட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர்26

ஒரு மாகாணத்துக்குரிய நியதி சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் அரசமைப்பின்படி, அந்த மாகாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட மாகாண சபைக்கு உரியதாக இருக்கையில் அதைத் தம்மிஷ்டப்படி தம் கைக்கு எடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

இரண்டு நியதிச் சட்டங்களை தம்பாட்டில் வர்த்தமானியில் அறிவித்து, அவை நடைமுறைக்கு வந்திருக்கின்றன எனவும் அவர் அறிவித்திருக்கின்றமை சட்ட வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. 2



## பருத்தித்துறையில்நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி




யாழ்.பருத்தித்துறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி மற்றும் 2

## மட்டு. தரவைத் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை தரைமட்டம்

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட மேடை உடைக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாக தரவை மாவீரர் தின ஏற்பாட்டுக்குழு தலைவர் வி.லவகுமார் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் 2





## வாழைச்சேனை விபத்தில் பொலிஸ் அலுவலர் சாவு!

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் 33 வயதுடைய அசங்க என்ற பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் மரணமடைந்துள்ளார். 12

## பண்டிவிரிச்சானில் நேற்று மாவீரர்கள் நினைவு நிகழ்வு

மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி மற்றும் நினைவு உரைகள் என்பன 12

## ஓ.எல். முடிவுகளில் வேம்படி முன்னணி


### 64 மாணவிகள் 9 பாடங்களிலும் 'ஏ'

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

2021 ஆம் ஆண்டின் ஜி.சீ.ஈ. சாதாரண பெறுபேறுகள் 12

## ரயில் பெட்டி பற்றி எரிந்தது



ரயில் பெட்டி ஒன்றில் திடீரென ஏற்பட்ட 12

# போதைப் பாவனையாளர்களின் புனர்வாழ்வுக்கு ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் நிலையம்!



## யாழ். செயலகக் கூட்டத்தில் மாநகர முதல்வர் பரிந்துரை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் போதைப் பொருள் பாவனையாளருக்கான புனர்வாழ்வு நிலையத்துக்கு இடம் ஒதுக்கலாம், அது பொருத்தமாக இருக்கிறது என்று நீதித்துறை சார்ந்தவர்கள் கூறுகிறார்கள் என யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான மாவட்ட குழு கூட்டம் யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் அரசாங்க அதிபர் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் கருத்து 12

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சச்சை இது.

நாட்டை உலுக்கிய இனப்பிரச்சனை என்ற பெரும் களேபரத்தின் விளைவாக, இந்தியத் தரப்பின் நேரடி தலையீட்டுடன் வந்தது மாகாண சபை.

அதிகாரத்தை மாகாணங்களுக்குப் பகிரும் ஏற்பாடு இது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மூலமே பல விடயங்கள்மாகாணசபைகளுக்குப்பகிரப்பட்டன.

மாகாண சபைக் கட்டமைப்பைப் பொறுத்தவரை இரு தரப்புகள்.

ஒன்று - மாகாண சபை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். அவர்களே பகிரப்பட்ட அதிகாரத்தை பெற்றுக் கொண்டவர்கள்.

மற்றத் தரப்பு - ஜனாதிபதி. அவரே அதிகாரத்தை பரவலாக்கிய அரசின் பிரதான நிறைவேற்று அதிகாரி. அவரின் பிரதிநிதி ஆளுநர்.

மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நியதிச் சட்டமாக்கும் அதிகாரத்தை ஆளுநர் பிடுங்கித் தாம் பிரயோகிப்பது, பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதி தமது பிரதிநிதி மூலம் மீளப் பிடுங்கிக் கொண்டு விட்டார் என்ற அர்த்தத்தைத் தருகிறது.

மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தை நிறைவேற்ற அதிகாரம் மீளப் பிடுங்கிக் கொள்ளும் செயலை ஆற்றியிருக்கின்றார் வடக்கு ஆளுநர்.

வாங்கிக் கட்டப் போகின்றார் என்பது மட்டும் புரிகின்றது...!

***

மாவையின் அலப்பறை தொடர்கிறது.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நேற்று. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டும்தான் கலந்து கொள்ளவில்லை. அழைப்பு அனுப்பினால்தானே அவர் பங்குபற்றுவதற்கு?

கூட்டத்தைக் கூட்டும் பொறுப்பை சுமந்திரனிடமிருந்து வஞ்சகமாகப் பிடுங்கிக் கொண்ட தமிழரசுத் தலைவர் மாவை, கஜேந்திரகுமாருக்கு அழைப்பு அனுப்பவே இல்லை. நான் ஏற்கனவே இப்பத்தியில் அதைப் பரகசியப்படுத்தி இருந்தமையினால், ஏன் அவருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று நேற்றைய கூட்டத்தில் மாவையைப் பிய்த்தெடுத்தார்கள் பங்காளிக் கட்சித் தலைவர்களும் கூட. யாருக்கும் பதில் தரவில்லை மாவை. கல்லுளி மங்கன் போல - பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி - கேட்ட கேள்விகளுக்கு மௌனம் சாதித்தார் அவர். திரும்பத் திரும்பு வற்புறுத்தப்பட்டபோது ஒருதடவை 'காரணம் இருக்கின்றது' என்று மென்று விழுங்கினார். பிறகு 'பின்னர் கூறுகிறேன்' என்ற பதிலை முணுமுணுத்தார்.

இவரிடம் கேட்டுப் பயனில்லை என்று விடயத்தை அத்தோடு விட்டுவிட்டு, தமது விவாத விவகாரத்துக்குள் இறங்கினார்கள் மற்றத் தலைவர்கள்.

நேற்றைய கூட்டத்துக்குஎம்.பிக்களை வராமல் தடுப்பதற்கு மாவை எடுத்த முயற்சியை நான் இப்பத்தியில் நேரத்தோடு அம்பலப்படுத்தி இருந்தமையால், அவரின் அந்த நகர்வு சரி வரவில்லை. சம்பந்தனிடமும் தொலைபேசியில் 'வாங்கி கட்டியமையை' அடுத்து, நேற்றுப் பகல் தாம் முன்னர் வரவேண்டாம் என்று வழிமறித்த எம்.பிமாருடன் தொடர்பு கொண்டு 'இல்லை வாருங்கள்!' என்று அழைப்பு விடுக்க வேண்டிய கட்டாயம் மாவையருக்கு ஏற்பட்டு விட்டது.

இலங்கைத் தமிழரசு கட்சியில் தனது தலைமைக்கு எதிரான கருத்தியல் நிலைப்பாடு முற்றி வருகின்றமையை யும், இனியும் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டாமல் தவிர்க்க முடியாது என்பதையும், கட்சித்தலைமைதம்மிடமிருந்து பறிபோகப் போகின்றது என்ற யதார்த்தத் தையும் உணர்ந்துள்ள மாவையர் இப்போதுபுதுக்கதைவிடத்தொடங்கியுள்ளார்.

"தந்தை செல்வா தமிழரசுக்குத் தலைவராக இரண்டு வருடம் இருந்தார். பின்னர் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணிபுரிந்தார்' என்று கட்சி சகாக்களுக்கு உபதேசம் செய்ய தொடங்கியிருக்கிறார் மாவையர். தந்தையைப் போல தானும் கட்சி தலைவர் பதவியை கையளித்து விட்டுச் செயலாளராக இருக்கப் போகின்றேன் என்பதுதான் அந்த கதை...!

அப்படியாயின் தமிழரசு இனி உருப்படவே மாட்டாது என்பது நிச்சயம்.

***

மாவீரர் தின அனுஷ்டானங்களை ரணிலின் அரசு கண்டும் காணாமல் விட்டிருக்கின்றதுஎன்பதுஉண்மைதான்.

அரசுத் தலைமை அப்படி முடிவு செய்தாலும், வாலுகளுக்கு சும்மா இருக்க முடியவில்லை.

மன்னாரில் தமிழர் வாழ்வுரிமை இயக்க தலைவர் சிவகரனுக்கும் மேலும் 6 பேருக்கும் எதிராக ஆள்காட்டிவெளி துயிலும் இல்ல மாவீரர் தினச் செயல்பாடுகளை ஆட்சேபித்து, மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஒன்றை நேற்று முன்தினம் பெற்றார் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி. இத்தினத்தை அனுஷ்டிப்பதன் மூலம் புலிகள் இயக்கத்தை மீள் உருவாக்கம் செய்கின்றனர் என்ற அடிப்படையில் அதற்கு நீதிமன்றத் தடை உத்தரவு.

தகவலைக் கேள்விப்பட்ட சிவகரன் சட்ட நடவடிக்கைகளுக்குப் போகாமல் நேரடியாக மன்னார் பொலிஸ் தலைமையுடன் தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறினார்.

அரசுத் தலைமையின் முடிவுக்கு மாறான நடவடிக்கை இது, இதனால் அரசியல் நெருக்கடிகளுக்கும் வித்திடுகின்றீர்கள் என்று அவர் சுட்டிக் காட்டிய போது தான், மாவட்ட பொலிஸ் தலைமை சுதாரித்துக் கொண்டது. நீதிமன்றத் தடை உத்தரவுக்கு விண்ணப்பித்த உள்ளூர் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு, மேலதிகாரிகள் செம அர்ச்சனை என்று தெரிகின்றது.

நேற்று முன்தினம் இரவு கிடைத்த பலத்த ஏச்சை அடுத்து, நேற்றுக் காலை நீதிமன்றம் ஆரம்பமானதும் முதல் வேலையாகி, மன்றில் பொலிஸ் முன்னிலையாகி, முதல் நாள் மாலை தான் விண்ணப்பித்துப் பெற்ற தடை உத்தரவை தானே வில்க்கிக் கொள்வதாகத் தெரிவித்து, வாபஸ் பெற்றுக் கொண்டது.

கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் அளிக்காத மாதிரி, ஜனாதிபதி இ(ற/ர)ங்கினாலும் நம் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பொறுக்க முடியாமல்தான் இருக்கின்றது...!

**- மின்னல் -**

## தமிழ்க் கட்சிகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரின் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களா. மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தம் கருணாகரன்(ஜனா), ஶ்ரீதரன், வினோதராதலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டார்.

சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் பூர்வாங்கமாக பின்வரும் மூன்று விடயங்களைக் கோரத் தீர்மானிக்கப்பட்டது:-

1. நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

2. அதிகார பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி, மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும்.

3. உள்ளகசுயநிர்ணயஅடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வடகிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப் படுத்துவதை நாம் வரவேற்கிறோம்.

- என்ற நிலைப்பாட்டை அரசுக்கு வலியுறுத்த முடிவெடுக்கப்பட்டது.

ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி இந்த விடயத்தில் இறுதி முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மாகாணசபை நியதிச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது பெரும் அரசமைப்பு அத்துமீறல் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. பிரமுகருமான சி.தவராசா விசனத்துடன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, அரசமைப்பு மூலம் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் படித்த பின்பு பணியாற்ற வேண்டும் என்றும் தவராசா தெரிவித்தார்.

நியதிச் சட்ட உருவாக்கத்திற்கு எந்த வொரு அதிகாரமும் அற்ற ஆளுநர் சட்ட முரணாக தற்போது நியதிச் சட்டத்தை உருவாக்கிவர்த்தமானிமூலம் அறிவித்திருக்கின்றமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் மாகாண நியதிச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாணசபைகளிற்கு உரியதே அன்றி மாகாண ஆளுநருக்குக் கிடையாது. அப்படி மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாணசபை நிறைவேற்றும் நியதி சட்டங்களை அங்கீகரிக்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மட்டுமே ஆளுநருக்கு உண்டு.

இதனை அறியாத வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 2022.10.27 அன்று வட மாகாணத்தின் வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச் சட்டம் மற்றும் சுற்றுலாப் பணியகம் நியதிச் சட்டம் என இரு நியதிச் சட்டங்களை 2303/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 154- எ-01 இன் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபையும் 9 ஆம் அட்டவணையின் முதலாம் நிகழ்ச்சி நிரலின் (மாகாண சபை நிரல்) ஏதேனும் கருமம் தொடர்பில் எம் மாகாணத்திற்கென அச் சபையை ஸ்தாபிக்கப் பட்டதோ அம் மாகாணத்திற்கு ஏற்புடைய தான நியதிச் சட்டங்களை ஆக்கலாம் என்றே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு ஆளுநர் அலுவலகம் வடக்கில் உள்ளதா கொழும்பில் உள்ளதா என்பது தான் தெரியாத நிலை என்றால் மறுபுறத்தில் ஆளுநருக்கு தனக்குரிய பணியே தெரியவில்லைப் போலும். தெரியாது விடின் அனுபவம் உடையவர்களிடம் கேட்டு செயல்படலாம். அதுவும் தவறு கிடையாது. அல்லது அரசமைப்பைப் படித்தாலே புரியும்.

மாறாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் இயக்குநரின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு உத்தரவு போடுவது போன்று செயல்பட்டு ஆளுநர் பதவியைக் கொச்சைப்படுத்தக் கூடாது.

ஓர் ஆளுநர் நியதிச் சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரம் உண்டு என வடக்கு மாகாண ஆளுநர் விவாதிப்பாரேயானால் அது தொடர்பில் பகிரங்க விவாதத்திற்கும் நான் தயாராகவே உள்ளேன். - என்றார்.

## மட்டு. தரவைத் துயிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோராகவும் உறவுகளாகவும் தொடர்ச்சியாக முழு வீச்சுடன் சிரமதான பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். தமது உறவுகளுக்கு நினைவேந்தலை செய்யவேண்டும் என்று ஆர்வத்துடன் செயற்பட்டுவருகின்றனர்.

தரவையில் முன்னெடுக்கப்படும் சிரமதான பணிகள் ஒவ்வொரு மாவீரர் குடும்பமும் இணைந்து புலம்பெயர்ந்துள்ள மாவீரர்களின் சகோதரர்கள், உறவினர்கள் இணைந்துதான் இதனை செய்கின்றனர். இங்கு சொல்லப்படுகின்ற தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினால் ஒரு குண்டூசி அளவுகூட உதவிகள் செய்யப்படவில்லை.

அத்துடன் வியாழனன்று நாங்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் மேடையொன்றை அமைத்திருந்தோம். வெள்ளிக்கிழமை காலை நாங்கள் சென்று பார்த்தபோது அந்த மேடை உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. அத்துடன் அங்கிருந்த அனைத்தும் அழிக்கப்பட்டிருந்தன. இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல் இறந்தவர்களுக்கான நினைவேந்தலை செய்யலாம் என்று அறிவித்துள்ள காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்துவருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை மாவீரர் துயிலும் இல்ல பணிகள் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு என்னும் அமைப்பு இரண்டு நாள்களுக்கு முன்பாக தரவை துயிலும் இல்லத்தினை ஜேர்மன் நாடு பொறுப்பெடுத்து நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

அவ்வாறான எந்த நிதியும் தரவை துயிலும் இல்லத்திற்கு கிடைக்கவில்லை. ஏற்பாட்டுக்குழுவான நாங்கள் உள்ள நிலையில் அவ்வாறான எந்த நிதியும் கிடைக்கவும் இல்லை, நாங்கள் கையாளவுமில்லை. அது யாருக்கு அனுப்பப்பட்டது என்பது இதுவரையில் எங்களுக்கு தெரியாது. இவ்வாறான பொய்யான பரப்புரைகளை புலம்பெயர் நாடுகளில் முன்னெடுப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாளை ஞாயிற்றுக்கிழமை 27ஆம் திகதி மாலை 6.05மணிக்கு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும். அந்த நினைவேந்தலில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் அனைவரையும் அழைத்து நிற்கின் றோம். உங்கள் பிள்ளைகளின் தியாகம், அர்ப்பணிப்பினை நினைவு கூரும் இந்த நாளில் அவர்கள் விதைக்கப் பட்டுள்ள இடத்தில்வந்து நினைவேந்தலை செய்வதற்கு இதுவொரு நல்ல தருணமாகும். - என்றார்.

## பருத்தித்துறையில் ...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு மிக உணாவுபூர்வமாக நடைபெற்றுள்ளது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியினால் பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன் போது 3 மாவீரர்களை மண் விடுதலை போராட்டத்திற்கு அர்ப்பணித்த தாய் ஒருவர் மாவீரர்களுக்கான பொதுச் சுடரினை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து உறவுகள் கண்ணீர் மல்க, உணாவுபூர்வமாக மாவீரர்களுக்கான அஞ்சலி நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு மரக்கன்றுகள், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் நினைவு மண்டபத்தை சூழ புலனாய்வாளர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.







காலைக்கதிர் Kalaikkathir

# ரஷ்யாவிடம் இருந்து சலுகை விலையில் எரிபொருள் கொள்வனவு செய்ய பேச்சு!

## அலி சப்றி மும்முரம்



ரஷ்யாவிடம் இருந்து சலுகை விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக மொஸ்கோவுடன் இலங்கை பல சுற்று பேச்சுகளை நடத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே வெளிவிவகார அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ரஷ்யாவுடன் இலங்கை நீண்டகாலமாக நல்ல இராஜதந்திர உறவுகளைப் பேணி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நியதிகள் அல்லது சட்டங்களை மீறாமல் இலங்கை ரஷ்யாவுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய–உக்ரேனிய மோதலால் நாங்கள் அசாதாரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்த அமைச்சர், பெற்றோல், நிலக்கரி, தானிய விலைகள் மற்றும் உரங்களின் விலை உயர்வு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இராஜதந்திர ரீதியிலும் பேச்சு மூலமும் இதனை விரைவாகத் தீர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் நிலவும் இராணுவ மோதல்கள் பல தசாப்தங்களில் மிக மோசமான பரிமாற்ற நெருக்கடியை எதிர்நோக்கும் இலங்கைக்கு கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் இங்கு மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், 'இலங்கையில் சுமார் 33 வீதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் அந்தத் தொழிலை மேற்கொள்வதற்கு எரிபொருள் அத்தியாவசியமான காரணியாகும். இது எமது மக்களின் வாழ்வாதாரம் போன்றது.

எமது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியுடன் எரிபொருளின் விலையும் நான்கைந்து மடங்காக அதிகரித்துள்ளது. பெரும்பாலான இலங்கையர்கள் அந்த விலையைத் தாங்க வேண்டியுள்ளது. அது கடினம்.

மேலும், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டும் இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் நாடுகளாகும். உண்மையில், கடந்த காலங்களில், நம் நாட்டுக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் பத்து நாடுகளில் அவர்கள் முன்னணியில் இருந்தனர்.

இந்த மோதல் சூழ்நிலை காரணமாக அவர்களின் வருகை வெகுவாகக் குறைந்துள்ளது. இது நமது பொருளாதாரத்தையும் இன்னொரு பக்கம் பாதிக்கிறது.

இந்த அனைத்து உண்மைகளையும் உன்னிப்பாகக் கவனித்த பிறகு, சலுகை விலையில் எரிபொருளைப் பெறுவதற்கான வழிமுறையில் கவனம் செலுத்தினோம். உண்மையில், எதிர்காலத்தில் ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் எரிபொருளைப் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தால், நாங்கள் நிச்சயமாக அந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம்.

ஏனென்றால், இந்த விலைவாசி உயர்வை இந்த நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. எங்கள் ஜனாதிபதி சொன்னதுபோல், யானைகள் சண்டையிடும் போது புல் பாதிக்கப்படும்' என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் மேலும் ஐவருக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளை 25 லட்சம் ரூபா வழங்கியது!



இலங்கை அரசாங்கத்தால் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட மேலும் 5 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் (சுப்ரமணியம் மோகன், ராமசாமி கிருஸானந்தன், வேலு யோகராஜா, பிரம்மசிறி ரகுபதிஐயர் ரகுபதி சர்மா, வேலாயுதன் வரதர்சன்) லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரனின் தாயார் ஞானாம்பிகை அல்லிராஜா தலா 25 லட்சம் ரூபாக்களை வழங்கி வைத்துள்ளார்.

அல்லிராஜா சுபாஸ்கரனின் வேண்டுதலுக்கு அமைய விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள், தமது வாழ்வை செப்பனிடவும், மறுசீரமைக்கவும், தமது குடும்பங்களுடனும், சமூகத்துடனும், இணைந்து வாழவும் அவர்களுக்கான வாழ்வாதாரத்திட்டம் அவசியம் என்பது உணரப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரனின் தலைமையிலான லைக்கா ஞானம் அறக்கட்டளை, ஏற்கனவே விடுதலை பெற்ற 8 பேருக்கு தலா 25 லட்சம் ரூபாக்களை கடந்த சில வாரங்களுக்கு முன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினர் அரசியல்வாதிகளின் கைப்பாவையாக செயற்படக்கூடாது!

## அதன் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா 'அட்வைஸ்'



இராணுவத்தினர் அரசியல்வாதிகளின் கைப்பாவையாக செயற்படாது, நாடு மற்றும் அரசமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இந்நாட்டில் இப்போது யுத்தம் இல்லை என்பதால், தேசிய பாதுகாப்பு தொடர்பாகப் பெரிதாகச் சிந்திக்கத் தேவையில்லை என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேசியப் பாதுகாப்புக்கு சவால் என்பது திடீரென ஏற்படும் விடயமாகும். இராணுவத்தினர் என்ற வகையில், அவர்கள் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்க வேண்டும்.

எனவே, பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. எந்தவொரு நாட்டிலும் தேசியப் பாதுகாப்பு ஸ்திரமாக உள்ளதாக உறுதியாகக்கூற முடியாது.

கொழும்பு மாவட்டத்தைவிட சிங்கப்பூர் சிறிய நாடாகும். ஆனால், அந்நாட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி, ஆசியாவிலேயே அதிகமான தொகையாகும்.

வியட்நாம், ஆஸ்திரேலியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளைவிட அதிக தொகைதான் அங்கு பாதுகாப்பிற்காக ஒதுக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த வருடத்தைவிடதற்போது 350 கோடி ரூபா அதிகமாக பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை பல்வேறு தரப்பினரும் விமர்சித்தார்கள்.

சீனிக்கான விலை மனுக்கோரலில், 450 கோடி ரூபா அதிகரித்தபோது அவர்கள் இதனை எதிர்க்கவில்லை.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், வருடாந்தம் 550 முதல் 650 கோடி ரூபா நஷ்டமடைந்து கொண்டிருந்தபோதும் இவர்கள் கவலையடையவில்லை.

பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாத தரப்பினரால் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க முடியாது. அதேபோன்று, பாதுகாப்பு பலவீனமான ஒரு நாட்டில் பொருளாதாரமும் முன்னேறாது.

இராணுவத்துக்காக நாம் கதைக்கும் அதேநேரம், இராணுவமும் அரசியல்வாதிகளின் கைப்பாவைகளாக செயற்படாது, நாட்டையும் அரசமைப்பையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரத்துபஸ்வெள போன்ற சம்பவங்களை எடுத்துக் கொண்டால், சில இராணுவத்தினர் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்த முயன்று, ஒட்டுமொத்த இராணுவமே எவ்வளவு அவப்பெயரை சம்பாதித்தது என்பதை மறந்துவிடக்கூடாது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# தாமதமாக பணிக்கு வருபவர்களுக்கு அபராதங்கள் அறவிட வேண்டாமாம்

## பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

பொது போக்குவரத்தில் தற்போது நிலவும் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு தாமதமாக பணிக்கு வருபவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டாம் என அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைய வாரங்களில் ரயில் தாமதங்கள் அவதானிக்கப்படுகின்றன எனவும் எனவே இந்தக் காரணியை கவனத்தில் கொள்ளுமாறு நிறுவனங்களின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய தாமதங்கள் மற்றும் பயணப் பிரச்சினைகள் தொடர்பாக ஊழியர்கள் எழுத்துபூர்வ அறிவிப்பை வழங்க வேண்டும் என்றும் நிறுவனங்களின் தலைவர்கள் தலையிட்டு இதற்கான தீர்வுகளை வழங்க வேண்டும் என்றும் அந்த அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

# யாழ். சுப்பர்மடத்தில் மாவீரர் நினைவேந்தல்!



யாழ்ப்பாணம் சுப்பர்மடம் பொது நோக்கு மண்டபத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் , மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகளை ஏற்பாட்டாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கைக்கான சீனத் தூதுவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் குழு சந்திப்பு



இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹோங்கை நாடாளுமன்ற உறுப்பினர் குழு சந்தித்துள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான மதுர விதானகே, பிரேமநாத் சி.தொலவத்த உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான கடன் பிரச்சினை, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், நேரடி முதலீடு, வரலாற்று உறவு, புதிய ஆற்றல், சுற்றுலாத் துறை மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளுநரின் ஆலாபரணம்

விளைவுகளின் விபரீதங்கள் புரியாமல் வினையாற்றியிருக்கின்றார் – விளையாடியிருக்கின்றார் – வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

வடக்கு மாகாணத்துக்கான இரண்டு நியதி சட்டங்களைத் தம்பாட்டிலேயே தயாரித்து, வர்த்தமானியில் அறிவித்து, சட்டமாக்கும்(?) கைங்கரியத்தை அவரே முன்னெடுத்து இருக்கின்றார். அரசமைப்பையும் சட்டங்களையும் தம்மிஷ்டப்படி வியாக்கியானம் செய்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தாரோ என்னவோ…!

பக்கத்தில் கற்றுத் தேர்ந்த – விடயம் அறிந்த – உயர் அதிகாரிகளை அல்லது ஆலோசகர்களைத் தம்முடன் வைத்திருக்காமையால் வந்த வினையாகவும் இது இருக்கலாம். ஆழமறியாமல் காலை விட்டிருக்கின்றார் என்பது மட்டும் உறுதி!

இத்தகைய தான்தோன்றித்தனமான – எதேச்சாதிகாரமான – மிக மோசமான – நடவடிக்கையை முன்னெடுக்க முன்னர், குறைந்தபட்சம் சட்டமா அதிபர் திணைக்களத்திடமாவது அவர் ஆலோசனை பெற்றிருக்கலாம். கேட்டிருந்தால் நிச்சயம் இப்படி தவறாக – அதிகாரமின்றி – முட்டாள்தனமான செயலை செய்ய அந்தத் திணைக்களம் பரிந்துரை செய்திருக்காது என்பது நிச்சயம்.

இனி விவகாரம் நீதிமன்றத்திற்கு போகும்போது, தான்தோன்றித்தனமாக ஆளுநரே நியதிச் சட்டத்தை யாத்த செயலை சட்டமா அதிபர் திணைக்களம் எப்படி நீதிமன்றத்தில் நியாயப்படுத்தப் போகின்றது?

நியதிச் சட்டங்களை யாக்கும் தனித்துவமான அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொணட மாகாண சபைகளுக்கேயுண்டு. அந்த மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றும் நியதிச் சட்டங்களை அங்கீகரிக்கவும், நடைமுறைப்படுத்தவும் அல்லது நிராகரிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டே தவிர, தாம் சட்டத்தை யாக்க அல்ல. அது, தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மிகத் தெளிவானவை; வெளிப்படையானவை.

ஆளுநர் தேவையானால் ஒழுங்கு விதிகளை அறிவிக்கலாம். ஆனால் அவை கூட மூன்று மாதங்களுக்குள் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இல்லாதமையால் அதையும் ஆளுநர் இப்போது செய்ய முடியாது.

ஒரு மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கத்தக்கதாக, சபையை இடைநிறுத்தி, மத்திய அரசின் ஆட்சியை ஜனாதிபதி அங்கு கொண்டு வருவாராயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த மாகாண சபையின் நியதிச் சட்டம் யாக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பிரயோகிக்கலாம் என்பது சட்ட ஏற்பாடு.

அதுவும் இங்கு – இப்போது – பொருந்தாது. அப்படி மத்தியின் ஆட்சி வடக்கில் ஜனாதிபதியால் கொண்டு வரப்படவில்லை.

கொழும்பில் சில இடங்களில் கூட்டம் கூட முடியாது என்று தெரிவிக்கும் ஒரு வர்த்தமானி அறிவித்தலை விடுத்து, பின்னர் அதை வாபஸ் வாங்கினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதுபோன்ற கதிதான் வடக்கு ஆளுநர் வெளியிட்ட நியதிச் சட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு நேரும் என்பது நிச்சயம்.

## ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு முறையில் மாற்றம் என்கிறார் சுசில்



ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு முறையில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நிரந்தர நியமனம் கிடைக்காததால் விரக்தியடைந்த ஆசிரியர் ஒருவர் 25 பனடோல் மாத்திரைகளை உட்கொண்டு ஆபத்தான நிலையில் உள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே ஆசிரியர் நியமனம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமாறு அவர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப தேசிய கல்விப் பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

இந்தத் துறைக்கு ஒரு குழுவைக் கொண்டுவர வேண்டும். இந்தத் தேர்வு இறுதியாக நடத்தப்படும்.

அதன் பின்னர், நாங்கள் ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு செய்து, 19 பீடங்களை இணைத்து தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவோம்.

4 ஆண்டுகள் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சிக்குப் பின்னர் ஒரு தரமான ஆசிரியர் வகுப்புக்கு அனுப்பப்படுவார்.

தற்போது அரச சேவையில் உள்ள பயிலுநர் பட்டதாரிகளை ஆசிரியர் பணிக்கு இணைத்துக் கொள்வதற்கான பொதுப் பரீட்சை டிசெம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும். 26 ஆயிரம் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பொதுப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரு பொலிஸ் அதிகாரிகள் மீதான முறைப்பாட்டை விசாரணை செய்யாமல் தள்ளுபடி செய்த நீதிமன்று!

வீதிச் சட்டங்களை மீறினர் எனத் தெரிவித்து, அமைதியான முறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை தடை செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இரு பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டு மனுவை விசாரணை செய்யாமல் தள்ளுபடி செய்து கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நளீன் தில்ருக் ஆகியோருக்கு எதிராக ஊடக செயற்பாட்டாளரான தரிந்து ஜயவர்தன இந்த இரு பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் இந்த முறைப்பாட்டை செய்திருந்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தை மீறுகின்றனர் எனத் தெரிவித்து வீதித்தடைகளை பயன்படுத்தி அமைதியான ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் வகையில் இந்த இரு பொலிஸாரும் செயற்பட் டனர் என அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

## யாழ்ப்பாணம் நகரில் உள்ள உணவகங்களில் சோதனை!



யாழ்ப்பாண நகர் பகுதியில் அமைந்துள்ள உணவகங்களில், யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களின் உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

அத்தோடு சுகாதார சீர்கேடான முறையில் வைத்திருந்த உணவுப்பொருள்கள் உரிமையாளர்களின் சம்மதத்துடன் பொது சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டன.

திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் வைத்திருந்த உணவகங்கள் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சகாதார பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர்.



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022

"பூட்டன் நாட்டிய பனைமரம்
காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன
நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா
வாழல்!"
- கவிஞர் புதுவை இரத்தினதுரை -

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு மாவட்ட குடி தண்ணீர் அபிவிருத்தி திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுங்கள்!

## சிறிதரன் எம்.பி. கோரிக்கை



உலக வங்கியின் நிதியுதவித் திட்டத்தின் கீழான நீர் வழங்கல் சுகாதார மேம்பாடு திட்டத்தின் கீழான செயற் திட்டத்தை ஏனைய மாவட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்க முடியுமாயின். கரும்புள்ளியான் குடிதண்ணீர் திட்டத்தை 2023 ஆம் ஆண்டுடன் எவ் வாறு இடைநிறுத்த முடியும்.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் சுத்தமான குடிதண் ணீரைப் பெற்றுக்கொள்ள பெரும் போராட்டத்தை எதிர் கொள்கிறார்கள்.

ஆகவே, முல்லைத்தீவு மாவட்ட குடி தண்ணீர் அபிவிருத்தித் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ்.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

வடக்கு மாகாணத்தில் யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பில் கருத்து ரைக்க அவதானம் செலுத்துகிறேன். யுத்தத்தால் பாதிக் கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் தற்போது வறுமை கோட்டில் முன்னிலையில் உள்ளது.

மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்குவதை பல்வேறு காரணிகளால் முடக்குவது முற்றிலும் மோசமானது. உலக வங்கியின் நிதி வழங்கலில் நீர் வழங்கல் சுகாதாரம் மேம்பாட்டு திட்டம் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கையில் வறுமை நிலை யில் உள்ள 7 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முதன்மை யாகக் கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் முல் லைத்தீவு மாவட்டத்தில் 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கு 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

முல்லைத்தீவு திட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத் தில் உள்ள கறுப்புள்ளியான் குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிப் பதற்காக மனுகோரல் கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. ஆனால், இது வரை கறும்புள்ளியான் குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிக்கப் படவில்லை. இதற்கு குறிப்பிடும் காரணிகள் நகைப்புக் குரியதாகும்.

செயற்திட்டத்தை முன்னெடுக்க நிதி இல்லை என்கிறார் கள், உலக வங்கி இந்த திட்டத்தை 2023 ஆம் ஆண்டுக் குள் நிறைவு செய்ய வேண்டும், ஆகவே, தற்போது திட்டத்தைத் தொடரமுடியாது, கொவிட் தாக்கம் என்ற காரணிகளை பொறுப்பான தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். குறிப்பிடும் காரணிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. இந்த காரணிகள் ஏனைய மாவட்டங்களுக்கு தாக்கம் செலுத்தவில்லை.

கறும்புள்ளியான் திட்டத்துக்கு கேள்வி கோரல் விடுக் கப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் கடந்த ஒக்ரோபர் மாதம் கம்பஹா, குரநாகல் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செயற்திட்டத்தை ஆரம்பிக்க பத்திரிகைகளில் கேள்வி மனு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா, குருநாகல் மாவட்டங்களின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் காலம் 2024 ஆம் ஆண்டு வரை நீடிக் கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி பணியின் முடிவுறு காலம் 2023 ஆம் ஆண் டுக்கு வரையறுத்துள்ளமை எந்தவிதத்தில் நியாயமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த போது இந்த விடயம் தொடர்பில் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார், ஆகவே, விடயதானத்துக்கு பொறுப்பாக அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிதண்ணீர் செயற்திட்டம் தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிழக்கு மாந்தை பிரிவு, துணுக்காய் பிரதேச மக்களில் பெரும்பாலானோர் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சுத்தமான குடிதண் ணீர் பெற்றுக்கொள்வது பெரும் போராட்டமாக உள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வன்னிவிலான குளம், அம்பாள் குளம், கொள்ளவலவன் குளம், ஒற்றடுத்தன் குளம், பாலை நகர், சிவநகர், செல்வ நகர், பாண்டியன்குளம், கரும்புள்ளியான் குளம், பூசரசன் குளம், விநாயக புரம் உள்ளிட்ட 15 கிராமங்களை சேர்ந்த 3,040 இற்கும் அதிகமான குடும்பங்களை சேர்ந்த 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சுத்தமான குடி தண்ணீர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள். அதேபோல் துணுக் காய் பிரசேத செயலகத்துக்கு உட்பட்ட 12 ஆயிரத்து 139 பேர் சுத்தமான குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண் டுள்ளார்கள். இந்த குடிதண்ணீர் திட்டம் பாதிக்கப்பட்டுள் ளதால் முல்லைத்தீவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் யுத்தத்தால் மிக மோச மாக பாதிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியால் நிதியுதவி வழங்கப்பட்ட திட்டம் மறுக்கப்பட்டுள்ளமை நியாயமற் றது.

ஏனைய மாவட்டங்களுக்கான திட்டங்களை முன்னெடுத்து செல்ல முடியுமாயின் ஏன் முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாது, ஆகவே நீதியுடன் செயற்படுங்கள்.

இந்த மக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் நாட்டில் ஏனைய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங் கள் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.

வட்டக்கட்சி குடிதண்ணீர் திட்டத்தில் 14 கிராம அலுவலர் பிரிவு உள்வாங்கப்பட்டன. ஆனால் இந்தப் பிரதேச நிலத்தடி கிணறு ஆழமாக காணப்படுவதால் குடிதண்ணீர் தரமாதான இல்லை கண்டாவளை குடிதண்ணீர் திட் டம் கடற்பகுதியை அண்மித்துள்ளதால் நீர் உவர்தன்மை யில் உள்ளதால் அந்தப் பிரதேச மக்கள் சுத்தமான குடி தண்ணீர் பெற்றுக்கொள்ள நீண்ட தூரம் செல்ல வேண் டியுள்ளது. வடக்கு மாகாணத்தில் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள குடிதண்ணீர் திட்டங்களை துரிதப்படுத்துமாறு விநயமாக கேட்டுக் கொள்கிறோம். மக்கள் எதிர்கொண் டுள்ள பிரச்சினையின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ளுங்கள். மாகாண அபிவிருத்தி திட்டங்களில் பாரபட்சம் பார்க்க வேண்டாம் என்பதை கேட்டுக் கொள் கிறோம் - என்றார்.



# மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற சங்கிலியன் பூங்காவின் கார்த்திகை வாசம்!




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் என்ற மலர்க்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. மலர்ச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் 'மலர் முற்றம்' என்ற காட்சித் திடல் சங்கிலியன் பூங்காவில் கடந்த 18 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இம்மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் காட்சிக்கூடங்களை அமைத்துள்ளனர். இதனைத் தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றமையோடு மலர்ச் செடிகளையும் மரக்கன்றுகளையும் வாங்கிச் செல்கின்றனர்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழமைபோன்றே இந்த ஆண்டும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருவதோடு, ஆலயங்களுக்கும் அதன் பழமுதிர்ச்சோலை திட்டத்தின்கீழ் இலவசமாகப் பழமரக்கன்றுகளை வழங்கி வருகிறது. பொது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தக் கார்த்திகை வாசத்தில் காட்சிக்கூடங்கள் நாளை (ஞாயிற்றுக்கிழமை) தினமும் காலை 8.30 மணிமுதல் முன்னிரவு 7.00 மணிவரை திறந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாவனைக்கு உதவாத 16 ஆயிரம் கிலோ நெல் ஏற்றிச் சென்ற லொறியுடன் ஒருவர் சிக்கினார்

(வவுனியா நிருபர்)

வவுனியா, நவ. 26

வவுனியாவில் உள்ள தனியார் நெல் களஞ்சிய சாலையில் இருந்து பொலன்னறுவைக்கு நெல் மூடையை ஏற்றிச் சென்ற லொறியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா தெற்கு பொது சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாவனைக்கு உதவாத வகையில் இருந்த16 ஆயிரம் கிலோகிராம் எடையையுடைய நெல் ஏற்றிச் சென்ற லொறியுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை ஈரற்பெரியகுளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே சரக்குகளை ஏற்றிச் சென்ற லொறி சிக்கியது. அத்துடன் லொறியின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில்வவுனியாதெற்கு பொதுச் சுகா தாரப் பரிசோதகர் அலுவலகத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** என்ன? வரவர எங்களது கூட்டமைப்புத் தமிழ்த் தலைவர்கள் பற்றிய கேள்விகளைத் தவிர்ப்ப தாய்த் தெரிகிறது. அதற்கான காரணத்தைத் தெரிவிப் பீர்களா?

**பதில்:-** இன்னும் அவர்களை, 'எங்களது தலைவர் கள்' என்று சொல்லும் உங்களது அறியாமையை என்ன சொல்ல? முன்பு டைரக்டர் கே.பாலச்சந்தர் இயக் கிய 'அரங்கேற்றம்' என்ற படத்தில், குடும்பவளர்ச்சிக்காய்ப் பாடுபட நினைக்கும் ஒரு பெண், சந்தர்ப்பவசத்தால் விபச்சாரியாய் மாறுவாள். அச்செய்தி வீட்டிற்குத் தெரியா திருக்கும் நிலையில், ஒருநாள் குடும்பத்தாருடன் உரை யாடும் போது அவள் வாய்தவறி, 'ஆம்பிளை என்றாலே எனக்கு அலுத்துவிட்டது' என்று, சொல்வதான ஒரு காட்சி வந்ததாய் ஞாபகம்.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை இப்பொழுது என் நிலையும் அதுதான். எதிர்காலக் கற்பனைகளை வைத்து நிகழ்காலத்தை ஓட்டுவது, உலக அரங்கை வைத்து வெற்றி பெறுவோம் என மக்களை ஏமாற்றுவது, நிகழ் கால மக்கள் பிரச்சினையைப் பற்றி எந்தவித அக்கறை யும் இல்லாது இயங்குவது, நாடாளுமன்ற உரைகளால் மட்டும் தம்மை இனப்போராளிகளாய்க் காட்டிக் கொள் வது, ஆளுக்காள் குழிபறிப்பது, பதவிகளுக்காய்ப் பரித விப்பது, கட்சிக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி நடப்பது, இது ஒரே கட்சிதானா? என நினைக்கும் அளவுக்கு ஒருவரை யொருவர் தூற்றிக் கொள்வது, யார் எவரோடு எப்போ நிற்பார் என்று தெரியாமல், சந்தர்ப்பவாத அரசியல் செய்வது எனக் கீழ்மையின் உச்சந்தொட்டுக் கொண்டு இருக்கிறார்கள் அவர்கள்.

தங்களுக்குள் சண்டை பிடிக்கவே இவர்களுக்கு நேரம் போதவில்லை. இவர்கள் எப்படி இனத்திற்காக எதிரிகளுடன் போராடப் போகிறார்கள்? இவர்களைப் பற்றி மினக்கட்டு எழுதுவதால் எனது நேரம்தான் வீணா கிறது. இவர்களும் திருந்துவதாய்த் தெரியவில்லை. இவர்களை ஆதரித்த மக்களும் திருந்துவதாய்த் தெரி யவில்லை. அதனால் மிகவும் சலிப்படைந்திருக்கிறேன். அரங்கேற்றம் படத்தின் கதாநாயகி சொன்னது போல, எனக்கும் 'கூட்டமைப்பு என்றாலே இப்போது அலுத்து விட்டது'.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாலை முறுக்கி 'கீழே' குத்தினால் விழுந்து படுத்த மாடுகூட எழும்பி ஓடும். என்ன எழுதினாலும் இந்த 'வீடு' ஓடும் என்று தோன்றவில்லை. ஹி..ஹி..**

**2. கேள்வி:-** பல விடயங்கள் பற்றியும் கதம்பமாய்க் கருத்துக்கள் சொல்லி வருகிறீர்கள். அதனால் கேட்கிறேன். புதிய இலக்கியங்களும் உங்களுக்குப் பிடிக்குமா? இன்றைக்கு இருக்கும் எமது இளம் ஈழத்து எழுத்தாளர் களில் உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார்?

**பதில்:-** பிடிக்காமல் என்ன? இலக்கியங்களை புதி யவை, பழையவை எனப் பிரிப்பதில் எல்லாம் எனக்கு உடன்பாடில்லை. இலக்கியம் என்றால், அது ஒன்றே தான். புதியவை பழையவை என்பதெல்லாம் காலவேறு பாடுகளே தவிர, இலக்கிய வேறுபாடுகள் இல்லை. கல்கி, சாண்டில்யன், அகிலன் தொடங்கி மணியன், சாவி, சிவசங்கரி, இந்துமதி வரை படித்து, அதன்பின் வந்த சுஜாத்தா, பாலகுமாரன் போன்றோரில் மூழ்கி, தற்போது எழுதுகிற எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோ கன் வரையும் ரசித்து வாசித்து வருகிறேன்.




எங்கள் நாட்டவர்களான டானியல், டொமினிக் ஜீவா, தெணியான், எஸ்.பொ, அ.முத்துலிங்கம், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், சட்டநாதர், வாசுதேவன், ஆ.சி.கந்தராஜா ஆகியோரின் எழுத்துக்களையும் படித் திருக்கிறேன். நான் தரும் இந்தப் பட்டியலில் முக்கிய மான சில பெயர்கள் என் மறதியால் விடப்பட்டிருக்கலாம்.

வாசிப்பு எனக்கு மூச்சைப் போன்றது. அது இல்லாமல் என்னால் இருக்கமுடியாது. தற்போது முதுமையால் கண்கள் அவ்வப்போது 'பிறேக்டவுன்' பண்ணுகின்றன. அதனால் வாசிப்பில் பிரச்சினை வர திக்குமுக்காடிப் போய் இருக்கிறேன்.

இனி உங்களது அடுத்த கேள்விக்கான பதிலைச் சொல்கிறேன். புதிய எழுத்தாளர்களில் என்னைத் தற் போது அதிகம் கவர்ந்திருப்பவர், ஆஸ்திரேலியாவில்




வாழ்ந்து வரும் ஈழத்து எழுத்தாளரான, ஜெ.கே. என்று அழைக்கப்படுகிற ஜெயகுமாரன் அவர்கள். அவரைப் பற்றி நான் அதிகம் சொல்வது தவறு. காரணம், அவரது 'கொல்லைப் புறத்துக் காதலிகள்' எனும் நூலில் அவர் என்னைப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். இப்போது அவரை நான் புகழ்ந்தால், அப் புகழ்ச்சி பரஸ்பரம் செய்கிற பண்டமாற்றாய்த் தெரியும். அதனால் அஞ்சவேண்டியி ருக்கிறது. ஆனால் என்னைத் தெரிந்தவர்களுக்கு நான் அப்படிப் பொய்மையாய் எழுதமாட்டேன் என்று தெரியும். அந்த நம்பிக்கையில் அவரைப் பற்றிச் சில சொல்லத் துணிகிறேன்.

ஜெயகுமாரனின் எழுத்துக்களில், எழுத்தாளர் சுஜா தாவின் பாணி அப்படியே பதிவாகியுள்ளது. இன்னொ ருவரைப் போல் எழுதுகிறவர்தானா? என்று இளக்கார மாகக் கேட்பீர்கள். சுஜாதாவின் பாணி என்பது அருண கிரிநாதரின் சந்தப்பாடல்கள் போல, மற்றவர்களால் எளிதில் பின்பற்ற முடியாத மிக நுட்பமான ஒன்று. அந் தப் பாணி கைவரப்பெற்றால் அதுவே பெரியபேறு. ஆனால் ஜெ.கே. இன் எழுத்தென்பது சுஜாதாவை அப் படியே 'கொப்பி' பண்ணும் எழுத்தல்ல. தனது தனித் தன்மையை இழக்காமல் சுஜாதாவை ஜீரணித்து, உள் வாங்கி அவர் எழுதும் எழுத்தில், ஜெ.கே. இன் 'சுயமும்' தெளிவாகத் தெரிகிறது.

பத்தி எழுத்துக்களை சிறுகதை போல் ஆக்குவதில் இவர் எஸ். ராமகிருஷ்ணன் போன்றோரின் சாயலையும் பெறுகிறார். இயல்பான நகைச்சுவை, அற்புதமான சொற்பிரயோகங்கள், அபூர்வமான மண்வாசனைப் பதிவுகள், ஆழமான சிந்தனை என்பவற்றை உள்வாங்கி, சொல்லவந்த விடயத்தைப் பாடமாய் நடத்தாமல், எளி மையாய் மக்கள் மனதேற்றும் நுட்பம் அவரது தனிப் பாணி. புதுமையான அவரது எழுத்தாற்றல் வியப்பேற் படுத்துகின்றது. நல்ல சீடன் ஒருவன் தனக்கு ஈழத் தில் கிடைத்தான் என சுஜாதாவின் ஆன்மா நிச்சயம் மகிழ்ச்சியுறும்.

பொதுமக்களை மறந்து, விமர்சகர்களின் பாராட்டுக் காகவும், விருதுகளுக்காகவும் மட்டுமே எழுத நினைக் கும் எங்கள் ஈழத்து எழுத்தாளர்கள் பலரின் மத்தியில், ஜெ.கே. உதயசூரியனாய்த் தனித்துப் பிரகாசிக்கிறார். தமிழ்நாட்டு சஞ்சிகையில் எழுதியிருந்தால் இவருக்கான தனி அடையாளம் அங்கு எப்போதோ வந்திருக்கும். இணையத்தளங்களிலேயே இவரது ஆக்கங்களைத் தற்போது படித்து வருகிறேன். கொல்லைப் புறத்துக் காதலிகளுக்குப் பிறகு நூல்கள் வந்தனவோ தெரிய வில்லை. இவர் ஈழத்து இலக்கிய உலகில் முளைத்தி ருக்கும் வீரியமுள்ள ஒரு புதிய வித்து என்பதில் ஐயத் திற்கு இடமேயில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஈழத்தில் சுஜாதா வைப் போல் எழுதும் ஒருவரா?**

**வாரிதியாரின் முன்மொழிவுகள் பிழைப்பதில்லை. தேடிப் படிக்கவேண்டியதுதான்.**

**3. கேள்வி:-** தமிழ் சினிமா கதாநாயகர்களின் நடனம் பற்றி விரிவாய் எழுதினீர்கள். எங்கள் நாட்டின் பரதநாட்டியக் கலைஞர்களின் நாட்டியங்கள் பற்றிய உங்களது அபிப்பிராயத்தையும் கொஞ்சம் சொல்லுங் களேன்.

**பதில்:-** சொன்னால் போயிற்று! நான் ஒன்றும் 'கண் டதும் கற்ற பண்டிதன்' இல்லை. கலை, இலக்கியங்களின் ரசிகன். அதனால் அவை பற்றிச் சற்றுத் தெரிந்து வைத்தி ருக்கிறேன். அவ்வளவே! நம் நாட்டியக் கலைஞர்களின்

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தேர்தலுக்கும் தலைமைகளுக்குமான சுழியோட்டங்கள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 192

இனப் பிரச்சினைக்கான தீர்வை பற்றி பேச்செடுக்க, களச் சூழ்நிலை சாதகமாக இருக்கிறது எனத் தமிழ் பரப்புகள் அபிப்பிராயம் கொள்வது, அது இப்பொழுது கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போலும், தேன் அன்றில் குளவி கூட்டைக் கலைக்கப் போய் பெருமளவில் குளவிகள் குத்தும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

பெரும்பான்மைப் பகுதிகள், சிறுபான்மைப் பகுதிகள் இரண்டுமே தங்களது வாக்கு வங்கிக்கும், நாடாளுமன்ற அரசியலுக்குமான உறுப்பினர் போட்டிகளுக்



இராமநாதன்

கும் இனவாதத்தை தூர்ந்துவிடாமல் இருந்து கொண்டிருக்கும் நிலைகளிலேயே வைத்திருக்க விரும்புவார்கள். அந்தப் பரவணித் தன்மையை மாற்றி, அதில் இருந்து மேலெழுந்து பயணிக்கக் கூடிய தேசிய தலைமைகள் இன்னும் உருவாகவில்லை. ஆதலால் இந்தப் பேச்சுவார்த்தை என்பதும் 'தீர்வுக்காகப் பேசிய பேச்சாகவே' இருந்து போனதாக வரலாறு பதியும்.

இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் தத்தமது தனி நிலைப்பாடுகளிலோ அன்றில் கட்சிகளின் முடிவுப்படியோ தான் நடப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தேர்தலை கண் வைத்தே நகர்வார்கள். ஜனாதிபதி ரணில் கூட பதவி முடிவில் தான் மீளவும் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தான் நோக்கம் கொண்டிருப்பார். அதற்கு எல்லா இன மக்களின் ஆதரவும் வேண்டும். காரியங்கள் கைகூடாவிட்டாலும், அவர் முயற்சி செய்தார் என்று அனுதாப அலை இருக்கும் என நினைக்கிறார். எதுவும் நடக்காமல் போனால், ரணில் அதைப் பாவித்து மேற்கத்திய நாடுகளுக்குத் தான் முயற்சித்தாலும் ஆதரவு பெற முடியவில்லை எனச் சாட்டுக்கள் சொல்ல அது வசதியாக இருக்கும். அதைவிட இனப் பிரச்சினையை வைத்தே வளர்ந்த கட்சிகள், அதனைத் திரும்பவும் முன் வைத்து அடுத்த தேர்தலுக்கும், அதன் பின் வருவதற்கும் கூட, வியூகங்கள் அமைக்கிறார்கள்.

மஹிந்தவுக்கு வருகின்ற தேர்தலை விட்டு, அடுத்த தேர்தலிலாவது மகன் நாமலை ஜனாதிபதி பதவிக்கு நிறுத்திப் பார்க்க வேண்டும் என்ற இலட்சியம். அதற்காக அவர் சஜித்தின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும். ரணிலுக்கு இனப்பிரச்சினை அணுகுமுறைகளால் ஆதரவு பெருகினால், சஜித் தரப்பிலிருந்து பலர் தனது பக்கம் சாயலாம் என்பது அவர் கணக்கு. பழைய வரலாறுகளில் இவ்வாறு பக்கம் சார்வதும், கட்சிகள் மாறுவதும் புதிதல்ல. அப்படிச் சாய்வதற்கு வாய்ப்புகள் இருப்பதால் மஹிந்த இனப் பிரச்சினைக்கான தீர்வில் ரணிலுக்கு ஆதரவு தந்தால், அது சஜித்தைப் பலவீனப்படுத்தும் என்று கணக்கெடுப்பார். இதுவே அவரது 13 க்கும் மேலாக போகலாம் என்ற கூற்றும், அதில் இந்தியாவை அணைத்துப் போகும் பாவனையும். அந்த நிலைப்பாடு சஜித்தை கட்டுப்படுத்துகிறது. அவரோ 13 ஆம் சட்ட திருத்தம்தான், அதற்கு முழு ஆதரவு தருவேன் என்ற நிலைப்பாடு.

இனி, பேராண்மைகளின் ஒருமுகம் சரத் வீரசேகரா. 'எது விதவித அதிகாரப் பரவலுக்கும் இடம் தர விடமாட்டோம்' எனத் தனது வாக்கை மட்டும் பேசவில்லை, பேராண்மை கட்டவிழ்க்கக் கூடியவற்றையும் கூறுகிறார்.

முன்ன எட்டப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வராமல் கிடப்பில் விடப்பட்ட, எத்தனையோ தீர்வுப் பொதிகள் உண்டு. சந்திரிகாவின் திட்டத்தைப் புளொட் தலைவர் சித்தார்த்தன் நினைவூட்டினார். திஸ்ஸவிதாரண குழுவின் பரிந்துரைகளை சுமந்திரன் பேச்சில் குறிப்பிட்டார். அவற்றுக்குப் பின்னதாக சுமந்திரன் கூட்டமைப்புக்காக ரணிலுடன் சேர்ந்து வரைந்த அரசமைப்பு சட்ட வரைவு உண்டு. அத்தோடு இந்தியா ஒப்பந்தத்தில் அமைந்த 13 ஆம் சட்ட திருத்தமும் இருக்கிறது. ஆனால் இவை ஒன்றையுமே ரணில் கையில் எடுத்துக்கொண்டு தீர்வு பற்றிய பேச்சை எடுக்கவில்லை. இந்தியா ஏற்படுத்திய 13 ஆம் தரத்தை நீக்குவதற்கு எண்ணமில்லை என்று கூறியமையைத் தவிர, தானே வரைவதற்கு உதவி தந்த நல்லாட்சி கால வரைவிலிருந்து முன்னேறுவோம் என்று கூட ரணில் கருத்துச் சொல்லவில்லை.

சுமந்திரன் கூட அந்த வரைவு ஒற்றையாட்சியாக, பிளவுபடுத்தக் கூடாத, முடியாத நாட்டுக்குள் அமைந்த தீர்வு என்று கருத்து தெரிவித்த போது, அவரது தரப்புக்குள்ளேயே எவ்வளவோ எதிர்ப்புகள் எழுந்தன. இப்பொழுது கூட்டமைப்பு தாங்கள் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய சமஷ்டி என்று தான் கோரிக்கை முன்வைக்கப்படும் என்கிறார்கள். சமஷ்டி என்ற வார்த்தையே சிங்கள பெரும்பான்மைக்கு நாரசமாக இருக்கிறது. இதில் மஹிந்த 13 க்கு மேலும் என்று அறிவிக்க, சஜித் 13 தான் எனக் கூற, பேராண்மை ஒன்றுமே இல்லை எனத் தெரிவிக்க, இன்றைய களச் சூழலிலாவது சமஷ்டியைப் பெற்று விடலாம் எனத் தமிழ் தலைவர்கள் எண்ணுகிறார்களா? இதற்குள் ஸ்ரீகாந்தா இணைப் பாட்சியைக் கோர வேண்டும் என்கிறார். அதனை ஆதரிக்கும் நீதியரசர் இப்பொழுது எதனைக் கடைப்பிடிப்பார்?

காலம் காலமாக, போர் முடிந்த பின்னும், செயற்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டங்களில் தமிழ் மக்கள் தொடர்ந்து பிரிவினையையே கோருகிறார்கள், அதனால் நாட்டின் நிலைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்கள் உண்டு என இராணுவச் செலவுகளுக்கு பெரும் பகுதி நிதி ஒதுக்கப்பட்டமை பயப்படுத்துவதற்கு வளர்க்கப்படும் அல்சேன் நாய்க்கு சோறும் கறியும் உணவாக தரப்படுவதில்லை. அதனைத்தான் சுமந்திரன் வவுனியாவில் விமானப்படைத் தளத்தின் உணவுச் சாலை நாட்டில் ஏழு நட்சத்திர ஹோட்டேலின் தரத்தில் இருக்கிறது என விவரித்தார்.

உண்மையில் இவ்வளவு செலவும் இராணுவமும் தமிழ் மக்களின் அடக்குமுறைகளுக்கும் பேராண்மையை மேலெடுப்பதற்கு நிறுவப்பட்ட வன, வன விலங்குகள், தொல்லியல் சம்மேளனங்களின் நடைமுறைகளுக்கு ஆதரவு தரவே பாவிக்கப்படுகின்றன. ரணில் அவற்றை அறியாதவர் அல்லர். தமிழ் - சிங்கள மக்களிடையே உள்ள காழ்ப்புணர்வுகளைத் தெரிந்தவர். ஆனாலும் தான் சமர்ப்பித்த இவ்வாண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு படைகளுக்கான நிதியே பெரும் பகுதியை விழுங்குகிறது. அப்படியானால், ரணில் பிராந்தியத்தில் இருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களைக் கணக்கெடுக்கிறாரா என்பது தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியவை பல உண்டு.

75 வருடங்களாக சமஷ்டி கேட்டு, அது இன்றும் வார்த்தை அளவிலேயே இருக்கிறது. நான் இந்தப் பதிவில் பல தடவைகள் குறித்தமை போல, இதனை டொனமூர் ஆணைக் குழுவின் முன் வைத்தவர்கள் சிங்கள மக்கள். அதனைப் பிரதிநிதிப்படுத்தியவர் முன்னைய பிரதமர் பண்டாரநாயக்கா. அன்றைய தமிழ்த் தலைவர்களுடன் எவ்வளவோ வாதாடியும், அவர்களது தலைவராக முன்னின்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் அதனை ஆதரிக்கவில்லை; எதிர்த்தார்.

அதே பண்டாரநாயக்கா 1956இல் சிங்கள மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து இனத்துவேத்திற்கு வித்திட்டார். ஆகவே வளர்ந்து விட்ட இந்த இனவாதத்தில், அதில் சுவைகண்டுவிட்ட பேராண்மை, சமஷ்டியைத் தீர்வு முறையாகப் பார்க்கப் போவதில்லை

அடுத்து சமஷ்டி, இணைப்பாட்சி என்பவை எல்லாம் வடிவங்களே. பெற்றுக் கொண்டால் பேச்சுக்குத் தமிழ் மக்கள் போராடி, இவ்வளவு அழிவுகளுக்குப் பிறகு அடைந்து விட்டோம் என்று பெருமை பேசலாம். ஆனால் மனோ கணேசன் கூறுவது போல், பேராண்மை மனோபாவம் மாறாமல், பேரினவாதிகள் உணர்ந்து அவற்றை நடத்த முன் வராமல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பெரும்பான்மை இருக்கும் நாடாளுமன்றமும் இருக்கும் வரை தரப்பட்ட வடிவங்கள் இணக்கமுறையிலானாலும் எவ்வளவு தூரம் அல்லது காலம் தமிழ் மக்கள் அதனை அனுபவிப்பார்கள் என்பது அனுபவங்களில் கேள்வி குறியாகவே இருக்கிறது.



பண்டாரநாயக்கா

13ஆம் திருத்தச் சட்டம் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படாது உழல்வதும், சமாதானத காலத்தில் சமஷ்டி நோக்கிய தீர்வு என சர்வதேச நாடுகளுக்கு பறைசாற்றியதும், பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுனாமி நிதிகளுக்கான இடைக்கால கட்டமைப்புக்கு நடந்தவை பற்றி மீள் ஆய்வு செய்து பார்த்தால் சிங்கள பேராண்மைகள், சர்வதேசங்களின் ஆதரவுகளுக்காக, இவற்றை தந்து விட்டோம் எனப் பாசாங்கு பண்ணி, அதனது நிர்வாக அதிகாரிகள் மூலம் உள்ளிருந்தே கறையான்கள் போல அரித்து உக்கிப் போகச் செய்யலாம். பெயரளவில் இணக்கத்தால் அதனை அடைந்து விட்டோம் அரசாங்கம் அதனை மாற்ற முயன்றால் நீதிமன்றங்களுக்குச் சென்று உறுதிப்படுத்துவோம் என்பவை எல்லாம் வாய்ச் சவடல்களில்தான் முடியும். ஏனெனில் நாட்டின் நீதித்துறை நாட்டின் பேராண்மையை பிரதிபலிக்காதது அல்ல என்பது யாவரும் அறிந்ததே.

ஆக, பேச்சுவார்த்தைகளின் இணக்கங்களையே அமுல்படுத்துவதற்கு ஸ்ரீலங்காத் தரப்பு, அதுபோல விடுதலை புலிகளும் தடம் மாறுவார்கள் எனக் கணித்த நோர்வேத் தரப்புகள் பிராந்திய வல்லரசான இந்தியாவிடமும், பின் உதவு நிதிகளால் கட்டுப்படுத்தக் கூடிய விதத்தில் சர்வதேச நன்கொடையாளரை அணிவகுத்தனர். அந்த கணிப்பையோ அணுகுமுறைகளையோ கணக்கெடுக்காது, உத்தரவாதங்கள் ஏதும் இல்லாமல், தமிழ அரசியல்வாதிகள் தனி நபர்களின் நம்பிக்கைகளில் தீர்வு பற்றிய முன்னெடுப்புகளை மேற்கொள்வது, அனுபவங்களில் இருந்து எதுவும் கற்றுக் கொள்ளாத குணங்களும், தலைமைத்துவங்களுக்காக வெட்டியோடும் சுழியோட்டங்களும்தான். இவற்றிற்கிடையே தமிழ் மக்கள் என்ன தீர்வு எதிர்பார்ப்பது?

சரித்திரங்களிலிருந்து கற்றுக் கொள்ளாதவர்கள் என்றுமே கற்றுக் கொள்வதில்லை...!

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய உதவியில் ஓமான் வளைகுடாவில் மேம்படுத்தப்படுகின்ற ஈரானிய துறைமுகம்

## புதுடெல்லிப் பேச்சுகளில் முன்னேற்றம் குறித்து ஆராய்வு



இந்தியா வெளியுறவுத்துறை செயலர் வினய் குவாத்ரா மற்றும் ஈரானின் துணை வெளிவிவகார அமைச்சர் அலி பாகேரி கனி ஆகியோர் சந்திப்பு.

இந்தியாவும் ஈரானும் ஓமான் வளைகுடாவில் உள்ள ஈரானின் சபஹர் துறைமுகத்தின் மேம்பாடு குறித்து விவாதித்தன. அத்தோடு, இரு தரப்பு பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்தியமையுடன் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் நேற்று முன்தினம் கருத்துகளை பரிமாறிக் கொண்டன.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி டுவிட்டரில் இந்திய வெளியுறவுத்துறை செயலர் வினய் குவாத்ரா மற்றும் ஈரானின் துணை வெளிவிவகார அமைச்சர் அலி பாகேரி கனி ஆகியோர் தலைமையில் இன்று இந்திய–ஈரான்வெளியுறவுஅலுவலகஆலோசனைகள் நடைபெற்றன. சபாஹர் துறைமுக மேம்பாடு உள்ளிட்ட இருதரப்பு உறவுகள் குறித்து இரு தரப்பும் விவாதித்தன. பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ரா இந்திய தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார், ஈரான் தூதுக்குழுவிற்கு அரசியல் விவகாரங்களுக்கான துணை வெளியுறவு அமைச்சர் அலி பகேரி கனி தலைமை தாங்கினார் என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தையின் போது, இரு தரப்பும் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் தூதரக ஈடுபாடு உள்ளிட்ட இருதரப்பு உறவுகளின் முழு வரம்பு குறித்தும் விவாதித்தனர். சபஹர் துறைமுகத்தின் ஷாஹித் பெஹெஷ்டி முனையத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஒத்துழைக்க இரு தரப்பினரும் தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு நாடுகளும்கருத்துகளைபரிமாறிக்கொண்டன. கூட்டு விரிவான செயல் திட்டம் **(JCPOA)** தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஈரானிய துணை வெளியுறவு அமைச்சர்வெளியுறவுசெயலரிடம் விளக்கினார்.

இந்த பயணத்தின் போது, ஈரானின் அலி பாகேரி, வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை புதன்கிழமை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டு விரிவான செயல் திட்டம் குறித்து விவாதித்தார்.

கூட்டு விரிவான செயல் திட்டம் 2015 ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தியா – ஈரான் உறவுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அர்த்தமுள்ள தொடர்புகளால் குறிக்கப்பட்டுள்ளன. 1950ஆம் ஆண்டு நட்புறவு உடன்படிக்கையின் மூலம் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டமையால், அமைச்சர்கள் மட்டத்திலான வருகைகள் அதிகரித்துள்ளன.

முன்னதாக, செப்ரெம்பரில், ஈரான் வெளியுறவு அமைச்சர் எச்.அமிரப்துல் லாஹியன் ஜெய்சங்கருடன் பேசினார்.

இரு நாடுகளும் தொடர்ந்து சந்திக்கும் பல்வேறு நிலைகளில் பல இருதரப்பு ஆலோசனை வழிமுறைகளை அமைத்துள்ளன. அமைச்சர்கள் மட்டத்தில் கூட்டுக் குழுக் கூட்டம் (JCM), வெளியுறவுச் செயலர் மட்டத்தில் தலைமை வகிக்கும் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் மற்றும் இணைச் செயலர்/ தூதர்கள் மட்டத்தில் கூட்டுத் தூதரகக் குழுக் கூட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தியா – ஈரான் வர்த்தக உறவுகள் பாரம்பரியமாக ஈரானிய மசகு எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்வதால் ஆதிக்கம் செலுத்தியது. 2018 – 19ஆம் ஆண்டில் ஈரானில் இருந்து 12.11 பில்லியன் டொலர் மதிப்பிலான மசகு எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்தது. இருப்பினும், மே 2, 2019 அன்று குறிப்பிடத்தக்க குறைப்பு விலக்கு (SRE) காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, ஈரானில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்தியுள்ளது. 2019 – 20இல் இருதரப்பு வர்த்தகம் 4.77 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, இது 2018 – 19இல் இருந்து 17.03 பில்லியன் டொலர் வர்த்தகத்துடன் ஒப்பிடும் போது 71.99 சதவீதம் குறைந்துள்ளது.



ஓமான் வளைகுடாவில் உள்ள ஈரானின் சபஹர் துறைமுகம். இங்குள்ள ஷாஹித் பெஹெஷ்டி துறையின் முதல் கட்டத்தை இந்தியா உருவாக்கி வருகிறது.

குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், 2011 – 12 மற்றும் 2019 – 20 க்கு இடையில் ஈரானுக்கான இந்திய ஏற்றுமதி 45.60 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. ஈரானுக்கான இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிகளில் அரிசி, தேநீர், சர்க்கரை, சோயா, மருந்துகள்/மருந்துகள், மனிதனால் உருவாக்கப்பட்ட பிரதான இழைகள், மின் இயந்திரங்கள் போன்றவை அடங்கும்.

சாபஹாரில் உள்ள ஷாஹித் பெஹெஷ்டி துறைமுகத்தின் முதல் கட்டத்தை இந்தியா உருவாக்கி வருகிறது. முதல் கட்டத்தின் முடிவில் துறைமுகத்தின் கொள்ளளவு 8.5 மெற்றிக் தொன்னை எட்டும். மே 2016இல், பிரதமர் நரேந்திர மோடியின் தெஹ்ரான் விஜயத்தின்போது, சபாஹரின் ஷாஹித் பெஹெஷ்டி துறைமுகத்தின் ஒப்பந்தம்கையெழுத்தானது, இது, துறைமுகத்திற்கான உபகரணங்களை வாங்குவதற்கு 85 மில்லியன் அமெரிக்க டொலர்முதலீட்டைஉள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**



இந்தியா வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் ஈரானின் துணை வெளிவிவகார அமைச்சர் அலி பாகேரி கனி ஆகியோர் சந்திப்பு.

காலைக்கதிர் Kalaikkathir




# யாழைச் சேர்ந்த இரு பெண்கள் கட்டுநாயக்கவில் வைத்து கைது!

போலியான ஆவணங்களுடன் வெளிநாடு செல்ல முயற்சித்த இரு பெண்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு ஓமன் நாட்டுக்கு செல்ல முயற்சித்துள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக இருவரும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97 ஆவது பிறந்தநாள் நிகழ்வாக, கந்தானை வைத்தியசாலையிலுள்ள சிறுநீரக சுத்திகரிப்பு மையத்துக்கு, மலசலகூடமொன்று கட்டிகொடுக்கப்பட்டு, அதனை கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாயகமும், செயலாளர் எஸ். தியாகராஜாவும், மாவட்ட மருத்துவ அதிகாரி தம்பிக்கா பத்திரணவும் கையளித்தார்கள்.

# பாட்டும் நானே? ..........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டியங்களை விமர்சிப்பதற்கு முன்பாக, பரதநாட்டியம் பற்றிய புரிதலை உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன்.

நாட்டியக்கலையை நம்மவர்கள் மூன்று கூறுகளாய்ப் பிரித்திருக்கின்றனர். நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பனவே அவையாம். இவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் பற்றியும் சற்றுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

நிருத்தம் என்பது, ஏதோ ஒரு லயத்தை அடிப்படையாய்க் கொண்டு, உடல் அங்கங்களை லலிதமாய் அசைத்துப் பழகுவது. இவ் அசைவுகள் நடனத்தின் ஆரம்பப் பயிற்சியாக ஆவதோடு அவையே நடனமாகவும் ரசிக்கப்படுகின்றன. அரங்கேற்றங்களில் ஆடப்படும் ஆரம்ப நடனங்களும் பெரும்பாலான சினிமா நடனங்களும் நிருத்தங்களேயாம். பெரும்பாலும் 'வர்ணத்தில்' இருந்துதான் நிருத்தியப் பகுதி ஆரம்பமாகிறது.

நிருத்தியம் என்பது, உடலின் அங்க அசைவுகளால், உள்ளத்தில் ஏற்படும் ஓர் உணர்வினை வெளிப்படுத்துவது. நிருத்தத்தில் அங்கங்களை அசைத்துப் பழகி, தனது கட்டுப்பாட்டுக்குள் அவற்றைக் கொண்டு வந்த ஒரு கலைஞன், பின்னர் அந்தப் பயிற்சியினால் உள்ளத்து உணர்வுகளை உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவான். இதுவே நிருத்தியமாம்.

இன்னும் இதனைச் சற்று விரிவாகச் சொல்லலாம். உள்ளத்தில் குறித்த உணர்ச்சிகள் ஏற்படும் போது, அதனால் உடல் அங்கங்களில் மாற்றங்கள் நிகழ்வது இறைவனுடைய படைப்பின் அற்புதம். 'நவரசம்' என்று சொல்லப்படுகின்ற உணர்வுகளின் பேதங்களுக்கு, எந்தெந்த அங்கங்கள் எப்படியெப்படி மாற்றம் உறும் என்பது பற்றித் தமிழின் இலக்கண நூல்கள் 'மெய்ப்பாடு' எனும் பகுதியில் விரிவாய் விளக்கி இருக்கின்றன.

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி மெய்யில் படுவதால்தான் அதற்கு 'மெய்ப்பாடு' என்று பெயர் வந்ததாய்ச் சொல்கிறார்கள். இந்த மெய்ப்பாடுகளைத் தெரிந்து கொண்டு, பாடல்களின் அர்த்தத்திற்கு ஏற்ப, குறித்த உணர்வுகளை வெளிப்படுத்த உடலில் அசைவுகளை ஏற்படுத்தி, ஆடுவதே நிருத்தியம் என்று சொல்லப்படுகிறது.

நாட்டியம் என்பது, இந்த நிருத்த, நிருத்தியப் பயிற்சிகளைப் பெற்று, அவற்றைக் கலந்து, எடுத்துக் கொண்ட ஓர் கருத்தை அல்லது கதையை முழுமையாய் வெளிப்படுத்துவதாம். தமிழில் நாட்டியம், நாடகம் என்பன ஒத்த கருத்துள்ள சொற்கள்.

இனி விடயத்திற்கு வருகிறேன். நான் பார்த்த அளவில், நம் நாட்டில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கலைஞர்களைத் தவிர மற்றவர்களுக்கு நாட்டியம் கைவருவதாய்த் தெரியவில்லை. பெரும்பாலானோர் நிருத்த, நிருத்தியங்களுடனேயே தங்களது கலைத்திறனை நிறுத்திக் கொள்கிறார்கள். நாட்டிய நாடகங்கள் என அவர்கள் அரங்கேற்றும் நடனங்களிலும் சுயகற்பனை விரிவு பெரும்பாலும் பூச்சியம்தான்.

இத்தகையோரால் மேடையேற்றப்படும் மாணவிகளின் அரங்கேற்றங்களில் நிருத்தம் ஓரளவு செம்மையுறுகிறது. நிருத்தியத்திற்கு வரும்போது, சுயகற்பனை விரிவு ஏதுமின்றி, பாடலின் சொற்பொருளுக்கேற்ப வெறுமனே அங்க அசைவுகளைச் செய்து தொலைக்கிறார்கள். பெரும்பாலும் 'பச்சைக்கிளியே வா வா வா' என்ற பாடலுக்கு 'நேர்சறி'ப்பிள்ளைகள் ஆடும் நடனம் போல்த்தான் இவர்களின் நடனங்கள் இருக்கின்றன. அதனால் வரவர அரங்கேற்றங்கள் 'செமையாய் போரடித்து' வெறுப்பேற்றுகின்றன.

ஆங்கிலத்தில் அடிக்கப்படும் 'றிச்சான' அழைப்பிதழ், பொய்மையாய்ப் பாராட்டவரும் ஒரு பிரதமவிருந்தினர், நடன உடையுடன் வந்து நின்று, பெற்றோர் உட்பட எல்லோரையும் வெள்ளைக்கார உச்சரிப்பில் புகழ்ந்துரைத்து ஆங்கில வரவேற்புரை செய்ய ஆடும் பிள்ளைக்குக் கொடுக்கப்படும் பயிற்சி, ஆயிரக்கணக்கான பணம் செலவழித்துத் தயாரிக்கப்படும் தடித்த மட்டையுடனான ஒரு நிகழ்ச்சிநிரல் (அவை வியர்வைக்கு விசுக்க பெரிதும் உதவுகின்றன.), வானத்துத் தேவதையை ஒத்து பிள்ளைக்குச் செய்யப்படும் அலங்காரம் எனத் தேவையில்லாத இவற்றிற்காய் மினக்கடுவதற்குப் பதிலாக பிள்ளைகளின் நடனப்பயிற்சிக்கு இன்னும் கொஞ்சம் சக்தியைச் செலவழித்தால் நடனக்கலை உருப்பட வாய்ப்புண்டு.

ஒரு பிள்ளை மேடையில் நடனம் செய்கையில் நவரசங்களில் குறித்த ஒரு ரசத்தைக் காட்டும் போது அதற்கான முகபாவத்தைக் காட்டவேண்டும். மற்றைய நேரங்களிலெல்லாம் 'நகை'தான் முகபாவமாய் இருக்கவேண்டும் (வாழ்க்கையில் கூட அப்படித்தான்). இதைக்கூட அரங்கேறும் பிள்ளைகளுக்குப் பால ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதில்லை. புதிதாக மோட்டர் சைக்கிள் ஓடும் ஒருவரைப்போல விழி பிதுங்க முகத்தை 'உம்' என்று பிடித்தபடி பிள்ளைகள் நிருத்தங்கள் செய்கிறார்கள். அவை பார்ப்பவர்களுக்கு நிருத்தமாயில்லை. வருத்தமாய்த்தான் இருக்கின்றன. அப்பிள்ளைகளைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இதுதான் உலகத்திலேயே சிறந்த நடனம் என்று புகழ அகப்பட்ட, பிரதம விருந்தினரைப் பார்க்க அதைவிடப் பரிதாபமாக இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். நிருத்தியத்தில் குறித்த பாவங்களை வெளிப்படுத்தலாம் என்று சொன்னேன் அல்லவா, அதில் நம்மவர்கள் பலருக்குப் புதிய கற்பனைகளைக் கொணரத் தெரிவதில்லை. காலாகாலமாக 'தியறி'ப் புத்தகத்தில் உள்ள மெய்ப்பாடுகளையே திரும்பத் திரும்பச் செய்து கழுத்தறுக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, ஒரு தலைவியை அவள் எதிர்பார்க்காத தருணத்தில் தலைவன் பார்த்து விடுகிறான். அதனால் அத்தலைவி நாணப்படுகிறாள். இது பாடலின் கருத்தாய் இருக்கும் செய்தி. இந்தப் பாடல் வரிக்கு, கி.மு காலத்திலிருந்து இன்று வரை கண்ணைக் கீழே விடுவது, காலால் நிலத்தைக் கீறுவது, கைவிரல்களை ஒன்று சேர்த்து முறுக்குவது என்பவற்றையே அபிநயமாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பார்க்கச் சகிக்கவில்லை.

நாணத்திற்கான அடிப்படை பாவமுறைதான் இது. இதற்கு மேலே கற்பனை போகக்கூடாது என்று ஒருவரும் சட்டம் போடவில்லை. தப்பதித்தவறிப் புதிதாய் ஒரு கற்பனை வந்துவிட்டால், தூக்கில் போட்டு விடுவார்கள் என்பது போல நினைந்து, திரும்பத்திரும்ப ஒரே பாவத்தைக்காட்டிச் சலிப்பேற்றும் இவர்களின் அட்டூழியத்திற்கு ஒரு அளவேயில்லை.

'ஜெயம்' எனும் சினிமாப் படத்தில் வரும், 'கோடி கோடி மின்னல்கள்' எனும் பாடலில், இதே போன்ற ஒரு காட்சி வருகிறது. அக்காட்சியில் தலைவன் திடீரெனப் பார்த்ததும், தூண் மறைவில் நின்ற தலைவி நாக்கை நீட்டிக் கடித்து, கண்ணை மேலெழுப்பி, வெட்கத்துடன் சிரித்து முகம் திருப்பும் காட்சி எத்தனை அற்புதமானது. இப்படியெல்லாம் புதிது புதிதாய்க் கற்பனை செய்து நடனம் ஆடக்கூடாதா என்ன?

மரபென்றால் முடிந்துவிட்ட பாதை அல்ல, நீட்சி செய்யக்கூடிய பாதையே! மேலே நான் சொன்ன கற்பனை வளத்திற்கு இந்திய நாட்டிய உலகின் நாட்டிய மேதை பத்மா சுப்ரமணியம் அவர்களின் நடனம் நல்லதோர் எடுத்துக்காட்டு. இன்றைக்கு 40 வருடங்களுக்கு முன்பு அவரது இராமாயண நாட்டிய நாடகத்தைக் கண்டு வியந்து விதிர் விதிர்த்திருக்கிறேன். எத்தனை ஆயிரம் புதிய கற்பனைகள், புதிய பாவங்கள். இராமாயணத்திற்கு நடனத்தின் மூலம் புதியதோர் வியாக்கியானமே செய்திருந்தார்.

அதேபோல youtube களில் வரும் நிருபமா ராஜேந்திரா எனும் இந்திய நடனக் கலைஞரின் நடனமும் அண்மைக்காலமாய் என்னைப் பெரிதும் ஈர்க்கிறது. என்ன அற்புதமான நடனம் அது. பிள்ளையார் வணக்கப்பாடல் ஒன்றில் அவர் செய்திருக்கும் புதிய கற்பனைகள் மெய் சிலிர்க்க வைக்கின்றன. பாஞ்சாலி சபதத்தை மிகப் புதுமையாய், கிட்டத்தட்ட ஒரு 'பலே' நடனம் போன்று நாட்டிய நாடகமாய் ஆக்கியிருக்கிறார். இன்னும் அவரது எத்தனையோ நடனங்கள் youtube இல் தேங்கிக்கிடக்கின்றன. அதையெல்லாம் நம்மவர்கள் கொஞ்சம் பார்த்தால் நல்லது.

சரி இனி தீர்ப்புக்கு வருகிறேன் (பட்டிமண்டப பழக்க தோசம்). நம்மவர்கள் நிருத்தத்தில் 'கிரடிற்' வாங்கி விடுகிறார்கள். நிருத்தியத்தில் பெரும்பாலும் 'பாஸ்ம ாக்ஸ்' தான். நாட்டியத்திலோ?......... எனக்கேன் வம்பு வேண்டாம் அதை விட்டுவிடுங்கள்.

உலகநாதரின் ஒப்பீனியன் : இவரால யாரோடையாவது கொழுவாம இருக்கமுடியாது போல. இனிக் கம்பன் கழகத்தின் நாட்டிய விழா 'அம்போ'தான்.

**4. கேள்வி:-** உங்கள் கழகம் விருதளித்து கௌரவித்த மூத்ததமிழறிஞர் ஔவை நடராஜன் அவர்களின் மறைவு பற்றி?

**பதில்:-** தமிழ் அறிஞர்களின் தொகை விரல்விட்டு எண்ணும்படியாய் வரவரக் குறைந்து கொண்டே போகிறது. என்னாகப் போகிறதோ நம் இயல்த்துறை? 'ஔவையார்' தமிழைக் கற்றுத் தலைநிமிர்ந்து தனித்து நின்ற ஒரு தமிழறிஞர். 'சார்பினுக்கெல்லாம் தகத்தக மாறி' கடைசிவரை புதிய தலைமுறையின் தோளில் கைபோட்டு நட்போடு வாழ்ந்த மாமனிதர். வழக்குச் சொற்கள் ஏதும் இல்லாமல் செந்தமிழ் நடையிலேயே அவர் பேசும் அழகு தனி அழகு! அருவியாய்க் கொட்டும் அவர் தமி



ழைக் கேட்க, இது கவிதையா? உரையா? என ஐயம் தோன்றும். அவரது உள்ளத்தின் நிறைவை எப்போதும் சிரித்தபடி இருக்கும் அவரின் முகம் உணர்த்தும். பல முதலமைச்சர்களால் பொன் போலப் போற்றப்பட்ட தனித் தகுதி கொண்டவர் அவர். தந்தை வழி வந்த தமிழும் சிந்தை வழி வந்த தெளிவும் தமிழ்த்தாயின் தனிப்புதல்வராய் அவரை இனங்காட்டின. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி தொடங்கி, 'பத்மஸ்ரீ' விருது வரை உயர்வுகள் பல அவரைத்தேடி வந்தன. அவற்றினையெல்லாம் 'நிலையில் திரியாது அடங்கி' நின்ற பேரறிஞர் அவர். நல்லவற்றை எங்கு கண்டாலும் போற்றி மகிழும் புலமையாளர். கடைசியாக நான் அவரைச் சந்தித்த போது, நான் நடத்தும் 'உயர் வள்ளுவ' வகுப்பின் அடுத்த பகுதி எப்போது youtube இல் வரும் என, மாணவ ஆர்வத்துடன் கேட்டு என்னை மருள (மகிழவும்) வைத்தார். அந்த மாமலை எங்கே? இந்த மடு எங்கே? நினைக்க நெஞ்சம் கனக்கிறது. மரணம் இயற்கைதான்! ஆனால் இத்தகைய மாமனிதர்கள் போகும் போது மனம் அவ் இழப்பை ஒப்ப மறுக்கிறது. அவர் அன்பும் தொடர்பும் கிடைத்தது இப்பிறவியில் எனக்குக் கிடைத்த பெரும் பேறு.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சொன்னது அத்தனையும் உண்மை. ஈழத்தவர் வணக்கமும் இணைகிறது.**

காலைக்கதிர் Kalaikkathir

## போதைப் பாவனையாளர்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக் கும்போதே யாழ் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்

என்று சொல்லப்படுகிறது. அதற்கு நான் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இன்னும் முன்னேற வேண்டும். பல குற்றச்சாட்டுக்கள் பொலிஸார் மீதும் இருக்கின்றன.

பொலிஸார் இவர்களுக்குத் துணை போகிறார்கள், இவ்வாறு செய்பவர்களைப் பொலிஸாருக்குக் காட்டிக் கொடுக்கின்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதான குற்றச்சாட்டு பொது மக்கள் மத்தியில் இருக்கிறது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் போதைவஸ்து கடத்துவதில் கடல் மார்க்கம் பிரதானமானதாக இருக்கிறது .

ஆகவே கடற்படையினர் மீதும் பொது மக்களுடைய குற்றச்சாட்டுக்கள் இன்னும்வலுவாகஇருக்கிறது. கடற்படையினரும் இதில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கடற்தொழிலாளர் சங்கங்களையும் நாங்கள் அணுகி எவ்வாறு போதைவஸ்துக் கடத்தலைத் தடுக்கலாம் என்று கலந்துரையாட வேண்டும். விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களை மீட்டுடெடுக்க புனர்வாழ்வு நிலையத்தினை எங்கள் பிராந்தியத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறைகளுக்கு அவர்களை அனுப்புகின்ற பொழுது அங்கு பல்வேறு குற்றச் செயல்களைப் பழகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் பொதுவாக இருக்கிறது.

சிறைச்சாலைக்கு உள்ளேயும் இந்தப் போதைவஸ்து பாவனை அதிகமாக இருக்கிறது. மிக மோசமான குற்றவாளிகளோடு பழகும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது. போதைவஸ்துவை பாவிப்பவரை நாங்கள் தனியான சிறைக்கு அனுப்புவது பொருத்தமாக இருக்கும்.

எங்கள் சமுதாயத்தில் ஏராளமான செல்வந்தர்கள் உள்ளார்கள். அவர்கள் இதனை அமைப்பதற்கு பணம் வழங்கத் தயாராக இருக்கிறார்கள் .

இதற்கான நடைமுறைகளை நாங்கள் முன்னெடுக்க வேண்டும். அரச அதிபர் இதற்கான இடத்தினை தெரிவு செய்ய வேண்டும்.

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் இதற்கான இடம் ஒதுக்கலாம். அது பொருத்தமாக இருக்கிறது என்று நீதித்துறை சார்ந்தவர்கள் கூறுகிறார்கள். இதனைப் பரிசீலித்து இதனை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - எனவும் தெரிவித்தார்.

## ரயில் பெட்டி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீ விபத்தில் அது எரிந்து நாசமாகியுள்ளது.

இரத்மலானை ரயில் பராமரிப்பு வளாகத்தில் பழுதுபார்க்கப்பட்டுக் கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட ருமேனியத் தயாரிப்பு ரயில் பெட்டி தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஓ.எல். முடிவுகளில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றைய தினம் வெளிவந்தன.

யாழ். மாவட்டத்தில் வழமை போல யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்னணி நிலைக்கு வந்தது.

முற்கொண்டு கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலை ரீதியாக வருமாறு:-

* யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - 65 மாணவிகள் (8 பாடங்களில் ஏ தர சித்தியை 46 மாணவிகள் பெற்றுள்ளனர்.)
* யாழ் இந்துக் கல்லூரி - 38 மாணவர்கள்
* யாழ். இந்து மகளிர் கல்லூரி - 11 மாண விகள்.
* இடைக்காடு ம.வி. - 3 மாணவர்கள்.
* யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி - 10 மாணவர்கள்.
* கிளிநொச்சி மகா வித்தியாலயம் - 18 மாணவர்கள்.
* உருத்திரபுரம் ம.வி. - 03 மாணவர்கள்.
* வட்டக்கச்சி ம.வி. -04 மாணவர்கள்.

## பண்டிவிரிச்சானில் .....





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றன்.

இந்நிகழ்வில் மாவீரர்களின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

## வாழைச்சேனை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ் விபத்துச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - கொழும்பு வீதி மியாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கேகாலையிலுள்ள தனது வீட்டிலிருந்து கடைமைக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பஸ்ஸுடன் மோதியதிலே பொலிஸ் உத்தியோகத்தர் அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

அவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622









காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவத்தினருக்கு கொடுக்கும் மரியாதையை மலையக தொழிலாளருக்கும் கொடுக்கவேண்டும்!

## அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்து



போர்க்காலத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்குக் கொடுக்கும் மரியாதையை, மலையக தொழிலாளர் வர்க்க உழைப்பு வீரர்களுக்கும் கொடுக்க வேண் டும் என மலையக மக்களின் மாண்பை பாதுகாக் கும் அமைப்பின் ஆலோசக ரான அருட் தந்தை மா.சத்திவேல் நேற்று (வெள் ளிக்கிழமை) வெளியிட்ட தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிப்பவை வருமாறு –

பதுளை ஹாலிஎல மேற்பிரிவு தோட்ட மயானபூமி அகழ்வழிக்கப்பட்டமை மனித நாகரிக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அது சட்டத்துக்கு முர ணானதாகும்.

அத்தோடு புதைக்கப்பட்டவர்களையும் அவர்க ளின்உறவுகளையும் மட்டுமல்ல, மலையக மக்கள் சமூகத்தையே அவமதிக் கும் செயல் என்பதால் இதனை வன்மை யாகக் கண்டிப்பதோடு, முறையான விசா ரணை நடத்தப்பட்டு, காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக் கப்படுவதோடு, புதைக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் மன்னிப்பு கோரி, மயானம் பாதுகாக்கப்படல் வேண்டும் என மலையக மக்களின் மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பு வேண்டுகோள் விடுப்பதோடு, இனியும் இவ்வாறு நடக்க தோட்ட கம் பனிகள் இடமளிக்கக் கூடாது எனவும் கேட்டுக்கொள்கிறது.

பொதுவாக புதைகுழிகள் அகற்றப்பட வேண்டுமாயின், அது தொடர்பில் நீதி மன்றில் முன் அனுமதி பெற்று புதைக் கப்பட்டவர்களின் எச்சங் கள் உரிய மரியாதையுடன் வேறிடமொன்றில் முறை யாக புதைக்கப்பட்டதன் பின்னரே மயான பூமி வேறு தேவைக்காகப் பயன்படுத்தப்படலாம்.

இவ்வாறான முன் அனுமதியை பதுளை ஹாலிஎல மேற்பரப்பு தோட்ட நிர்வாகம் பெற் றுக்கொண்டதா? இல்லை யாயின், ஏன்?

மலையக மக்கள் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் இந்நாட்டில் தமது 200 வருட வரலாற்று வாழ்வை பெருமையுடன் நினைவுகூரவுள்ள நிலையில் மயான பூமி அழிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் இந் நாட்டின் பிரஜைகள் அல்லர் எனக் கூறு வதாகவே உள்ளது. இதுவே பேரினவா தம். இதுவே இன அழிப்பு.

மலையக மக்கள் மலையகத்தை நோக்கி ஆரம்ப காலங்களில் நடந்தே அழைத்து வரப்பட்டபோது வழியில் நோ யின் காரணமாக கைவிடப்பட்டு இறந்த வர்கள் மிருகங்களின் உணவானதுண்டு. அத்தோடு சிலர் மிருகங்களின் தாக்கத் தாலும் கொல்லப்பட்டுள்ளனர். கடல் சீற் றத்தினால் மரணித்துள்ளனர்.

மலைப்பாங்கான பிரதேசத்தை உற் பத்தி பயிர் நிலங்களாக மாற்றும்போது நிலவிய காலநிலை மற்றும் வனவிலங் குகளின் தாக்கம் காரணமாக 1841 ஆம் ஆண்டு வரை 70 ஆயிரம் பேரும், 1841 -1849 இடைப்பட்ட காலப்பகுதியில் 90 ஆயிரம் பேரும் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்தக் காலகட்டத்தைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக நூற்றுக்கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். எனினும், உயிரிழந்த இவர்களுக்கு கல்லறைகளோ மயான பூமிகளோ கிடையாது.

இவ்வாறு மறைந்தவர்களைக் கௌர விக்கவுள்ள இக்கால சூழ்நிலையில் ஹாலிஎல தோட்ட சம்பவம் மிகுந்த மன வேதனையளிக்கிறது.

வடக்கு – கிழக்கு எங்கும் விடுதலைப் புலிகளின் காலத்தில் உரிய மரியாதை யுடன் பாதுகாத்துவந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் கடந்த ஆட்சியாளர்களால் முழுமையாக அழிக்கப்பட்ட போதும், வடக்கு கிழக்கு தமிழர்கள் அவர்களின் நினைவிடங்களில் வருடந்தோறும் உணர் வுபூர்வமாக விளக்கேற்றி நினைவேந்தல் நடத்துகின்றனர்.

இத்தகைய நினைவேந்தல் தியான வாரத்திலேயே ஹாலிஎல மேற்பிரிவில் மயானம் அழிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களும் உழைப்பு வீரர்களே. அவர்களது மயா னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் மேற்படி தோட்ட நிர் வாகம் மயானத்தை அழிக்கும் செயற் பாட்டை உடன் நிறுத்தி நீதிமன்றில் முன் அனுமதி பெறவேண்டும்.

புதைக்கப்பட்டவர்களின் அடையாளம் தெரிந்தோரின் எச்சங்கள் உரிய கௌரவ மளிக்கப்பட்டு வேறிடங்களில் புதைக் கப்படுவதோடு அடையாளம் தெரியாதோ ரின் எச்சங்கள் தனியாக பொது இடத்தில் புதைக்கப்படவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தோட்ட கம்பனிகள் அனைத்து தோட் டங்களிலும் இறந்தவர்களைப் புதைப் பதற்கான தனியான இடத்தை ஒதுக்கி, தோட்ட நிர்வாகமே அதனைப் பராமரிக்க வும் வேண்டும்.

அங்கு புதைக்கப்பட்டவர்களும் புதைக் கப்படுபவர்களும் தோட்டங்களில் வியர்வை சிந்தி உழைத்தவர்கள் மட்டுமல்லர், நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தந்து, நாட்டைப் பாதுகாக்கும் தொழில் வீரர்கள்.

போர்க்காலத்தில் இறந்த இராணுவத் தினருக்கு கொடுக்கும் மரியாதை இத் தொழிலாளர் வர்க்க உழைப்பு வீரர்களுக் கும் கொடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உயிரிழந்த முதலை ஒன்று தொண்டைமானாறில் மீட்பு!



யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த நிலை யில் முதலையொன்று நேற்று (வெள்ளிக் கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் இருந்து தொண்டை மானாறு செல்லும் வீதியிலேயே முதலை வீதிக்கு குறுக்காக உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அத்துடன் தொண்டைமானாறு நீரேரி யில் முதலை இருப்பதாக ஏற்கனவே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்த நிலையிலேயே இறந்துகிடந்த இந்த முதலை மீட்கப்பட்டுள்ளது.

# மனிதக் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் ஓமான் தூதரக அதிகாரியின் கடவுச்சீட்டு இரத்து

மனிதக் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் ஓமானில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரியின் இராஜதந்திர கடவுச் சீட்டு இரத்துச் செய்யப்பட்டதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரி வித்துள்ளது.

இந்த நபர் இலங்கை வந்தவுடன் உட னடியாக கைது செய்யப்பட்டு மனித கடத் தல் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர் பாக விசாரிக்கப்படுவார் என்றும் எதிர் வரும் நாட்களில் அவர் இலங்கை திரும்புவார் என நம்புவதாகவும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இலங்கையில் துரித உணவுகளின் விலையுயர்வால் உடல் பருமன், நீரிழிவு நோய் பாதிப்பு குறைந்தது!

சந்தையில் துரித உணவு வகைக ளின் விலை உயர்வால் உடல் பருமன் மற்றும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட் டவர்களின் எண்ணிக்கை குறைவடைந் துள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத் தின் ஊட்டச்சத்து பிரிவு நடத்திய ஆய் வில் தெரிய வந்துள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவின் தலைவர் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித் துள்ளார்.

பெரியவர்களும் குழந்தைகளும் சந் தையில் விலையுயர்ந்த துரித உணவு களை வாங்குவதைத் தவிர்ப்பதே இதற்குக் காரணம் என அடையாளம் காணப் பட்டுள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து பிரிவு 105 கிராமப்புற சேவை அலுவலர் பிரிவுகளுடன் இணைந்து இந்தக் கணக்கெடுப்பை நடத்தியது. குறிப்பாக குழந்தைகளுக்கு சர்க்கரை நோய், கல்லீரலில் கொழுப்பு சேர்வது போன்ற நோய்கள் வெகுவாகக் குறைந் துள்ளதையும் இந்தக் கணிப்பு உறுதி செய்துள்ளது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# வடை, ஐஸ்கிறீம் வாங்க பக்கத்து வீட்டை உடைத்துதிருடிய சிறுவர்கள் இருவர் கைது!

அளவத்துகொடை பொலிஸ் பிரிவில் உள்ள சைஸ்டன் தோட்டப் பகுதியைச் சேர்ந்த 11 மற்றும் 14 வயதுடைய இரு சிறுவர்கள் வீடுடைத்து திருடிய குற்றச்சாட் டில் வியாழக்கிழமை கைதாகி உள்ளனர்.

இது பற்றித் தெரிய வருவதாவது –

மேற்படி சம்பவத்தில் இரு சிறுவர்க ளும் அயல் வீடு ஒன்றில் வீட்டார் இல்லாத நேரத்தில் பின் பக்கம் கதவை உடைத்து உட்புகுந்துள்ளனர்.

அங்கு வைக்கப்பட்டிருந்த மின் உபக ரணங்கள் சிலவற்றைத் திருடி உள்ளனர்.

பின்னர் அதில் ஒரு மின் உபகர ணத்தை 300 ரூபா பணத்துக்கு விற் பனை செய்துள்ளனர்.

அந்த உபகரணத்தின் உண்மைப் பெறுமதி 3 ஆயிரத்து 650 ரூபாவாகும். விற்பனை செய்து கிடைத்த 300 ரூபா பணத்துக்கு வடையும், ஐஸ்கிறீமும் வாங்கி சாப்பிட்டுள்ளனர். மற்றும் உபகரணங் களை பக்கத்தில் உள்ள ஒரு புதரில் எறிந்துள்ளனர். வீட்டார் செய்த முறைப் பாட்டை அடுத்து பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளில் இருந்து திரு டப்பட்ட பொருள்களைப் பொலிஸார் மீட் டுள்ளனர். திருடப்பட்ட மின் உபகரணம் ஒன்றை 300 ரூபாவிற்கு வாங்கிய நபரும் சிறு வர்களும் கைது செய்யப்பட்டுள்ள னர். மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 15 வயது மாணவியை 11 தடவை வன்புணர்ந்து காட்சிகளை அதிபருக்கு அனுப்பிய இளைஞன்!

## மொரவக்க பிரதேசத்தில் சம்பவம்

மொரவக்க பிரதேசத்தில் 15 வயதான பாடசாலை மாணவி ஒருவரை வன்பு ணர்ந்து அது தொடர்பான நிர்வாண காணொலிகளை அதிபருக்கும் ஏனைய வர்களுக்கும் வட்ஸ்அப்பில் அனுப்பிய தாகக் கூறப்படும் 20 வயதுடைய ஒருவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யினர் வியாழக்கிழமை கைது செய்துள் ளனர்.

சந்தேக நபர், மாணவியை வீட்டில் வைத்து 11 தடவைகள் வன்புணர்வு செய் துள்ளார் எனப் பொலிஸ் விசாரணைக ளில் தெரிய வந்துள்ளது. மாணவியின் பெற்றோர் வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறியபோது, சந்தேக நபர் அங்கு சென்று மாணவியை பாலியல் பலாத்காரம் செய்தார் எனவும், சந்தேக நபர் தனது கையடக்கத் தொலைபேசியில் அந்தக் காட்சியை பதிவு செய்தார் எனவும் விசா ரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மாணவியை சிறுவர் இல்லத்துக்கு அனுப்பிவைத்துள்ள நிலை யில் சந்தேக நபரை மொரவக்க நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# அரிசியின் விலை கிலோவுக்கு 40 ரூபாவரை குறைவடையும்?

ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 35 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை குறைக் கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ நெல்லின் விலை 24 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், வியாழக்கிழமை நிலைவரப்படி ஒரு கிலோ நெல் 101 ரூபாவாகக் குறைந் துள்ளது.

தற்போதைய அறுவடையின் போது விவசாயிகளிடமிருந்து ஒரு மூடை நெல் 4 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வ னவுசெய்ய அரிசி ஆலை உரிமையாளர்க ளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரை யாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2022இல் வெளியிடப்பெற்றது.